பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 04 திங்கட்கிழமை (19-11-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:358

### அனுராதபுரம் - மதவாச்சி வீதியில்

# கிளைமோரில் ஜீப் சிதறியது!

# சிரேஷ்ட பௌத்த தேரர் பலி!!

## பொ.ஐ.முவின் அலுவலகம் மீது கிரனேட் வீச்சு

வவுனியா,நவ.19

வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் அமைந்திருந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் அலுவலகம் மீது நேற்றுக்காலை 9.30 மணியளவில் கிரனேட் வீசப்பட்டது. இதனால் அலுவலகம் சேதமடைந்தது. (ஐ)

## ஞாயிறு தினங்களில் ரியூசன் நடத்தத் தடை வரும்

'ரியூசன்' வகுப்புக்களை ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்துவதைத் தடை செய்யும் வகையில் 1971 ஆம் ஆண்டின் விடுமுறை தொடர்பான சட்டங்களை திருத்துவதற்கு அரசு முடிவு செய்திருப்பதாக இணையத் தளச் செய்தி ஒன்று தெரிவித்தது.

புதிய திருத்தங்களின்படி - பௌர்ணமி தினங்களில் விளையாட்டு நிகழ்ச்சிகள் நடத்துவதும் தடை செய்யப்படும் என்று தெரிகின்றது. (உ)

## இரு இளம் பிக்குகளும் சாரதியும் படுகாயம்

கொழும்பு,நவம்பர்19

**அனுராதபுரம் - மதவாச்சி வீதியில் - கெப்பிடிக் கொலாவையில் - நேற்றுக் காலை 9.30 மணியளவில் சிரேஷ்ட பௌத்த தேரர் ஒருவர் பயணம் செய்த ஜீப் வண்டி சக்திவாய்ந்த கிளைமோர் கண்ணியில் சிக்கிச் சிதறியதில் அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.**

**ஜீப்பின் சாரதியும் வேறு இரண்டு இளம் பிக்குகளும் படுகாயங்களுக்குள்ளாகினர்.**

அனுராதபுரம் பிரதேச பௌத்த மகாசங்க நாயக்கரும் ஸ்ரீபுர பௌத்த விகாரையின் பிரதமகுருவுமான பிஹிம்பிய கொல்ல தம்மலோக தேரரே இச் சம்பவத்தில் உயிரிழந்தார்.

வேறு இளம் பிக்குகள் சகிதம் ஸ்ரீபுரவில் இருந்து மதவாச்சி நோக்கி சென்று கொண்டு இருந்த சமயமே தேரர் பயணம் செய்த ஜீப் வண்டி கோனமெடியாவ என்னும் இடத்தில் வீதியில் மறைத்துப் புதைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த கிளைமோர் கண்ணி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு - எதிரணி ஆதரவாளர் களனியில் நேற்று மோதல்!

### 12 பேர் காயம்! போக்குவரத்து ஸ்தம்பிதம்!

பொ.ஐ.மு. ஆதரவாளர்களுக்கும் ஐ.தே.க. ஆதரவாளர்களுக்கும் இடையே நேற்றுக்காலை களனியில் இடம்பெற்ற மோதலில் 12 பேர் காயமடைந்துள்ளனர்; எட்டு வாகனங்கள் சேதமடைந்துள்ளன; அருகில் உள்ள கடைகள் இரண்டும் சேதமடைந்துள்ளன.

இது தொடர்பாக இரு தரப்பும் பொலீஸில் முறையிட்டுள்ளன. மோதலுக்கு ஐ.தே.கவே காரணம் என பொ.ஐ.முவும் பொ.ஐ.முவே காரணமென ஐ.தே.கவும் குற்றஞ்சாட்டியுள்ளன. சுமார் இருமணி நேரம் மோதல் இடம்பெற்றது. இதனால் கொழும்பிலிருந்து வெளிமாவட்டங்களுக்கு களனிப் பாலத்தினால் செல்லும் வாகனப் போக்குவரத்துக்கள் இரு மணி நேரமாகத் தடைப்பட்டன. தலை நகருக்கு மிகச் சமீபமாக இரு தரப்பினருக்கும் இடையே இடம்பெற்ற மிகப் பெரிய மோதல் இது எனப் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

இன்றுவரை 869 தேர்தல் வன்முறைகள் பதிவாகியிருப்பதாகவும் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ)

## சகல பயிலுநர் ஆசிரியரும் நிரந்தர நியமனம் பெறுவர்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,நவ.19

நாட்டிலுள்ள சகல பயிலுநர் ஆசிரியர்களும் நிரந்தர நியமனத்தைப் பெறவுள்ளனர் இதற்கான கடிதங்கள் அடுத்த வாரத்தில் அனுப்பி வைக்கப்படும்.

கல்வி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஹட்டன் தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற அதிபர்கள், ஆசிரியர்களின் கலந்துரையாடலின்போது அமைச்சர் இத் தகவலைத் தெரிவித்தார்.

பதில் அதிபர்களாகக் கடமையாற்றுவோருக்கும் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

ஆசிரியர்கள் பெற்றுக்கொண்ட கடன் பிரச்சனை தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடி தீர்வு ஏற்படுத்திக் கொடுக்கப்படும். மலையகப் பாடசாலைகளுக்குக் காணிகளைப் பெற்றுக்கொடுக்கவும், கட்டடங்களை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுவதோடு மலையகத்தில் தமிழ்மொழி மூல அழகியல் கல்லூரி ஒன்றை நிறுவவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் சொன்னார்.

(ஐ-9)

## 'செல்' தொலைபேசி ஊடாக

# கட்டுநாயக்கா மீதான தாக்குதல் நேரடியாக வன்னியில் இருந்து நெறிப்படுத்தப்பட்டது!

### விசாரணை அறிக்கையில் பரபரப்பான தகவல்கள்

கொழும்பு, நவ.19

கடந்த ஜூலை 24 ஆம் திகதி கட்டுநாயக்கா விமானப் படைத் தளம் மற்றும் சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதல், விடுதலைப் புலிகளின் வன்னித் தலைமைப் பீடத்திலிருந்து 'செல்' தொலைபேசி மூலம் நெறிப்படுத்தப்பட்டது.

வன்னித் தளத்திலிருந்து அனுராதபுரத்தில் உள்ள 'செல்' தொலைபேசிக் கோபுரத்துடன் சக்திவாய்ந்த 'அன்ரனா' ஒன்றின் மூலம் தொடர்பை ஏற்படுத்தி, அதன் வழியாக நீர்கொழும்பில் செயற்பட்ட கரும்புலிகளுக்கு கட்டளைகளை வழங்கிக்கொண்டிருந்தார் புலிகளின் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மான்.

- கட்டுநாயக்கா தாக்குதல் பற்றிய இத்தகைய தகவல்களை பிரபல இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸ் வெளியிட்டிருக்கிறார்.

இந்தத் தாக்குதல் குறித்து விசாரணை நடத்திய புலனாய்வாளர்கள் தாக்குதல் திட்டம் தயாரிக்கப்பட்ட விதம், செயற்படுத்தப்பட்ட முறை ஆகியவை பற்றிய சகல விவரங்களையும் தற்போது கண்டுபிடித்திருப்பதாகத் தெரிவிக்கும் இக்பால் அத்தாஸ், 'த சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் தனது வாராந்த களநிலைவரம் பற்றிய கட்டுரையில் அவற்றை விலாவாரியாக விவரித்திருக்கிறார்.

நீர்கொழும்பு, கட்டுவ பகுதியில் நூறு யார் தூர வித்தியாசத்தில் இருந்த இரண்டு பாதுகாப்பான வீடுகளை இத்தாக்குதலுக்குரிய மைய நிலையங்களாகப் புலிகள் பயன்படுத்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் ஆணையாளருக்கு எதிராக மனுத் தாக்கல்

அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்தின் கீழ் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை தேர்தல் ஆணையாளர் சரிவரப் பயன்படுத்தத் தவறிவிட்டார் என்று தெரிவித்து, தேர்தல் கண்காணிப்பாளர்கள் மூவர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத், தாக்கல் செய்திருக்கின்றார்கள்.

தேர்தல் வன்செயல்கள் பற்றிய கண்காணிப்பு மையத்தைச் சேர்ந்த றோஹன் எதிரிசிங்க, சுனந்த தேசப்பிரிய, வ்ண கருணதிலக ஆகியோரே உயர்நீதிமன்றத்தின் தலையீட்டைக் கோரி மனுச் செய்திருக்கின்றார்கள்.

17 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் தேர்தல் ஆணையாளர் விடுத்த வழிகாட்டல்களைக் கடைப்பிடிப்பதற்கு ரூபவாஹினி தவறிவிட்டது. இதுவிடயத்தில் ரூபவாஹினி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரை நியமிப்பதற்கு தேர்தல் ஆணையாளர் தவறிவிட்டார் என்று அவர்கள் தங்களது மனுவில் தெரிவித்துள்ளனர்.

எதிர்மனுதாரர்களாக தேர்தல் ஆணையாளர், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தலைவர் டபிள்யூ.பி. எஸ்.ஜெயவர்த்தனா உட்படப் பலரின் பெயர்கள் இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளன. (உ)

## போதைவஸ்து கடத்தலை தடுக்க ஏற்பாடு

கொழும்பு,நவ.19

போதைப்பொருள் கடத்தலை தடுக்க கரையோரப் பகுதிகளில் கணகாணிப்புக்களை பலப்படுத்த இலங்கை - இந்திய அதிகாரிகள் இணங்கினர்.

இரு நாடுகளினதும் போதைப் பொருள் கட்டுப்பாட்டு அதிகாரிகள் கொழும்பில் கூட்டம் ஒன்றை நடத்தினர். கடந்த காலங்களில் போலன்றி கடத்தற்காரர்கள் இப்பொழுது தனியாகவே செயற்படுவதாக இக்கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

இம்மாத ஆரம்பத்தில் சென்னையில இரு இலங்கையர் கைது செய்யப்பட்டதை அடுத்தே இவ்விடயம் தெரிய

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. தாண்டவன்வெளியில் பொலீஸார் மீது கிரனேட் வீச்சு!

### தேடுதலில் 13 பேர் கைதாகினர்

மட்டக்களப்பு,நவ.19

மட்டக்களப்பில் தாண்டவன்வெளிச சந்தியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் மீது நேற்று நண்பகல் ஒரு மணியளவில் கிரனேட் வீசப்பட்டது. இதில் மட்டக்களப்பு பொலீஸ நிலையத்தைச் சேர்ந்த மூன்று பொலீஸார் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தையடுத்து பொலீஸாரும், இராணுவத்தினரும் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். இதனால் ஏற்பட்ட பதற்றத்தில் தாண்டவன்வெளிப் பகுதியில உள்ள கடைகள் அனைத்தும் மூடப்பட்டன. மட்டக்களப்பு - திருமலை வீதியில் போக்குவரத்துக்களும் ஸ்தம்பிதமடைந்தன. திருமலை வீதியால் சென்ற பொதுமக்களை பொலீஸார் தாக்கினர். மட்டக்களப்பு நகரிலும், தாண்டவன்வெளிப்பகுதியிலும் சன நடமாட்டம் வெகுவாகக் குறைந்து காணப்பட்டது. மட்டக்களப்பு பஸ் நிலையத்திலிருந்து புதுப் பால வீதியால் போக்குவரத்துக்கள் நடைபெற்றன.

இதேவேளை -

(14 ஆம் பக்கம் பார்க்க)



பிழைப்புவாத அரசியலுக்கும் - துரோகத்தன அரசியலுக்கும் முடிவுகட்ட....

தமிழ்மக்களின் கௌரவமான, சுதந்திரமான அரசியலை உத்வேகப்படுத்த....

ஆதரிப்பீர் தமிழர் கூட்டணியை!

சுரேஷ் பிரேமச்சந்திரன்

தமிழர் விடுதலைக் கூட்டணி



# பதவியில் இருந்த அரசுகள் ஒருபோதும் முழுமனதுடன் புலிகளோடு பேசியதில்லை

## புலிகளோடு பேசாமல் தீர்வு இல்லை என்கிறார் மு.காங்கிரஸ் வேட்பாளர்

யாழ்ப்பாணம்,நவ.19

இதுவரைகாலமும் பதவியிலிருந்த அரசாங்கங்கள் விடுதலைப் புலிகளைப பேச்சுக்கு அழைப்பதுபோன்று பாசாங்கு செய்தனவே தவிர முழுமனதுடன் புலிகளை அவர்கள் பேச்சுக்கு அழைக்கவில்லை.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் யாழ். மாவட்ட தமிழ் வேட்பாளர் ஞானசுந்தரம் ஆனந்தகுமார்.

யாழ்.பஸ்தியன் ஹொட்டலில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் தேர்தலுக்குப் பின்னர் ஆட்சி அமைக்கக் கூடிய எந்தவொரு சிங்களக் கட்சியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவில்லாமல் ஆட்சி அமைக்க முடியாது. எனவே பதவிக்கு வரும் அரசாங்கத்துடன் பேரம் பேசி அவர்களுக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணபதற்கு முஸ்லிம் காங்கிரஸ் கட்சி

**தேர்தல் களம்**

யின் தலைவர் ரவூப் ஹக்கீம் உறுதியளித்துள்ளார். இந்த வகையில் அரசுடன் பேரம்பேசி தமிழ் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே அவர் என்னை யாழ்.மாவட்ட வேட்பாளராக நியமித்துள்ளார்.

தமிழ் மக்களுடைய பிரச்சினைகள், தேவைகள் தொடர்பாக அவரின் நிலைப்பாடுகளை நன்கு அறிந்து கொண்ட பின்னரே நான் யாழ்ப்பாணத்தில் வேட்பாளராக நிற்பதற்குச் சம்மதித்தேன்.

வடக்கு - கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு ஏராளமான பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றில் முக்கியமான பிரச்சினையாக இருப்பது இனப்பிரச்சினையே. இந்த இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டியது அவசியமாகும்.

கடந்த ஐந்து தசாப்தங்களாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் இனப்பிரச்சினையை மேலும் தொடர விடாது உடனடியாகப் பேச்சுக்கள் மூலம் தீர்வு காண்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தயாராக இருக்கின்றது. எந்த அரசாங்கமும் விடுதலைப் புலிகளுடன பேச்சு நடத்தாமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினரும் அதன் தலைவர் ஹக்கீமும் இதனை நன்கு உணர்ந்துள்ளனர்.

விடுதலைப் புலிகளை அழைத்துப பேச்சு நடத்துமாறு அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு சம்மதித்துள்ள ஹகீம், தேவையேற்படின் மட்டும் ஏனைய கட்சிகளையும் அதில் இணைத்துக் கொள்வதற்கும் தயாராக இருக்கிறார்.

நான் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டால், விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துமாறும் தமிழ் மக்களின் ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணுமாறும் நாடாளுமன்றத்தில் குரல் கொடுப்பேன்.

தற்பொழுது யாழ்ப்பாணத்தில் மீனவர்கள் நிம்மதியாக, சுதந்திரமாக மீன பிடிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

### நாடாளுமன்றத்தில் குரல் கொடுப்பேன்

மீன் பிடிப்பதற்கு அவர்களுக்கு பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் தடைகள் யாவற்றையும் நீக்கி, அவர்கள் சுதந்திரமாகத் தொழில செய்வதற்கு வழியை அமைத்துக் கொடுப்பேன்.

அதுமட்டுமன்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் தரத்துக்கு நவீன வசதிகளையும் கொண்ட பல்கலைக கழகமாக மாற்றி அமைப்பதற்குரிய திட்டம் ஒன்றையும் தயாரித்திருக்கிறேன்.

தமிழ் மக்களுக்காக நாடாளுமன்றத்தினூடாக நான் விடுக்கும் கோரிக்கைகளை பதவிக்கு வரும் அரசாங்கம் தட்டிக்கழிக்குமானால் எனது பதவியை இராஜினாமாச் செய்வதோடு



முஸ்லிம் காங்கிரஸில் இருந்தும் விலகிவிடுவேன்.

எந்த அரசியல் கட்சியையும் விமர்சிப்பதற்கோ அவர்களின் செயற்பாடுகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிப்பதற்கோ நான் விரும்பவில்லை. எமது கட்சியின் கொள்கைகளையும் எனது நிலைப்பாட்டையுமே எடுத்துக கூற விரும்புகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் கல்விச் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்யவேணடிய தேவை இருக்கின்றது. அதனை சிறந்த முறையில் அபிவிருத்தி செய்வதற்கு எமது கட்சி தயாராக இருக்கிறது.

யாழ்.குடாநாட்டில் எத்தனையோ பட்டதாரிகள் வேலையற்று இருக்கின்றார்கள். ஆனால் குறைந்த கல்வித்தரம் உடைய பலருக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாகப் பலர் என்னிடம் கவலை தெரிவித்திருக்கின்றார்கள். நான் நாடாளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட்டால் இந்தப் பட்டதாரிகளுக்கு எல்லாம் வேலை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

அமெரிக்கா, பிரிட்டன், கனடா போன்ற நாடுகள் விடுதலைப் புலிகளைத் தடைசெய்துள்ளன.

அந்த நாட்டு அரசுகளின் தேவையற்ற, அவசர முடிவு என்றே இதனை நான் கருதுகின்றேன்.

### தந்தை செல்வாவே வழி காட்டி

தந்தை செல்வாவின் பெயரைப் பயன்படுத்தி விளம்பரம் செய்வது ஏன என்று பலர் என்னிடம் கேள்வி எழுப்பினார்கள்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஆரம்ப வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் அமரர் தந்தை செல்வா. அவரது வழியில் வந்தவர்கள்தான் முஸ்லிம் காங்கிரஸை வளர்த்தெடுத்தனர்.

அந்த வகையில் நானும் அவரது கொள்கைகளைப் பின்பற்றியே சேவை செய்ய விரும்புகின்றேன்.

தென் பகுதியில் உள்ள முஸ்லிம் மக்கள் பலருடன் நான் உரையாடிய பொழுது அவர்களில் பெரும்பாலானவர்கள் யாழ்ப்பாணத்தில் மீண்டும் குடியேறி, தமிழ் மக்களுடன் ஒற்றுமையாக வாழ்வதற்கு விரும்புவதாகவும் அதற்கு ஏற்பாடு செய்து தருமாறும் கேட்டிருக்கிறார்கள்.

நான் பதவிக்கு வரும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேசி அவர்கள் அனைவரும் சம்மதித்தால் அதற்கு ஏற்பாடு செய்து தருவதாக அவர்களிடம் கூறியுள்ளேன்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைக்கும் செயலையும் அவர்களின் விருப்பத்திற்கு மாறான செயல்களையும் நான் செய்யமாட்டேன் - என்றார் ஆனந்தகுமார். (ஐ-4)

## ஐ.தே.க. வேட்பாளர்களுக்கு கல்வி அமைச்சு வாகனங்கள்!

கொழும்பு,நவ.19

கல்வி அமைச்சுக்கு சொந்தமான இரு வாகனங்கள் கொழும்பு மாவட்ட ஐ.தே.க. வேட்பாளர்களின் தேர்தல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உடனடி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சர் சரத் அமுனு கம உயரதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இரவு நேரங்களில் சாரதிகள் இவ்வாகனங்களை எடுத்துச்சென்று ஐ.தே.க. வேட்பாளர்களின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் பயன்படுத்தி உள்ளனர்.

கல்வி அமைச்சு காரியாலய பதிவுப் புத்தகத்தில் பதியாது அமைச்சு வாகனங்களை வெளியில் எடுத்துச் செல்வது குறித்தும் விசாரணை நடத்த அமைச்சு அதிகாரிகள் பணிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## 11 ஈழ அகதிகள் இராமேஸ்வரம் சென்றனர்

சென்னை,நவ.19

இலங்கையில் இருந்து 11 அகதிகள் நேற்று இராமேஸ்வரம் போய்ச் சேர்ந்திருக்கின்றனர்.

தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த இவர்கள் படகு மூலம் வந்ததாகவும் - அவர்களை ஏற்றிவந்த படகோட்டி ஒத்தப்பேட்டையில் அவர்களை இறக்கி விட்டு சென்றுவிட்டதாகவும் - மதுரையில் அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

தனுஷ்கோடிக்கு அழைத்துச் செல்லப்பட்ட அகதிகள், அங்கிருந்து மணடபம் முகாமிற்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (ஐ-9)

## நீண்டகாலமாக நிரந்தர டாக்டர் இல்லை

சண்டிலிப்பாய்,நவ.19

வட்டுக்கோட்டை அரசினர் மத்திய மருந்தகத்தில் கடந்த பல வருடமாக நிரந்தர வைத்திய அதிகாரி பதவி வெற்றிடமாகவே இருந்து வருகிறது. மருந்துக் கலவையாளர் பதவியும் கடந்த பல வருடமாக இங்கு நிரப்பப்படாது வெற்றிடமாக இருந்து வருகிறது. (க-135)

## கிழக்கில் புலிகளின் பகுதிக்கு டிராக்டர்கள் செல்ல அனுமதி

ஏறாவூர்,நவ.19

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கு உழவு இயந்திரங்களைக் கொண்டு செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நேற்று ஞாயிற்றுக் கிழமை முதல் நீக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை முன்னாள் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்திடம் மட்டக்களப்பு பிரதேச இராணுவ கட்டளையிடும் அதிகாரி கேணல் வீ.எல். ஆர்.அன்டனிஸ் தெரிவித்துள்ளார்.

- வலையிறவுப் பாலம், செங்கலடி கறுப்புப் பாலம், ஒப்போனு வீதி, சந்தனமடு வீதி, கிரான் பாலம் ஆகியவற்றினூடாக டிரக்டர்கள் கொண்டு செல்வதற்கு கடந்த இரு வாரகாலமாக இராணுவம் தடைவிதித்திருந்தது.

## தேர்தல் கண்காணிப்பு மையத்தின் அலுவலகம் யாழ் நகரில் திறப்பு

யாழ்ப்பாணம்,நவ.19

தேர்தல் வன்செயல்களைக் கண்காணிப்பதற்கான மையம் (Centre For Monitoring Election Violence - CMEV) யாழ்ப்பாணத்தில் டேவிட் வீதியில் அலுவலகம் ஒன்றைத் திறந்துள்ளது.

தற்போதைய பொதுத் தேர்தலை ஒட்டிய நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பொறுப்பை இந்த அலுவலகம் கையாளும்.

தேர்தல் வன்செயல்கள் மற்றும் குளறுபடிகளைக் கண்காணிக்கும் - பக்கச் சார்பற்ற - இந்த அமைப்பின் இரு அமைப்பாளர்கள் தற்போது யாழ்ப்பாணம் வந்து தங்கியுள்ளனர்.

பிரபல அரசியல் விமர்சகர் பாக்கியசோதி சரவணமுத்து, சிங்களப் பத்திரிகையாளர் சுனந்த தேசப்பிரிய ஆகியோர் மூன்று தினங்கள் இங்கு தங்கியிருந்து யாழ்தேர்தல் நிலைமைகளை ஆராய்வர்.

பல்வேறு அரசியல் கட்சிகளினதும் பிரமுகர்கள், அரசு அதிகாரிகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் ஆகியோரை இவர்கள் சந்தித்து வருகின்றனர்.

இவர்களது ஏற்பாட்டில் யாழ்.நகரில் திறக்கப்பட்டுள்ள அலுவலகத்தில் இணைப்பாளராக பி.ஏ.ஜே.இராஜசிங்கம் பணியாற்றுவார். தொலைபேசி இலக்கம் 021-2225 மூலம் இந்த மையத்தோடு பொதுமக்கள் தொடர்பு கொண்டு தேர்தல் வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோகங்கள் குறித்து தகவல் தெரிவிக்கலாம்.

தேர்தல் வன்செயல்களைக கண்காணிப்பதற்கான இயக்கம் 1997 ஆம் ஆண்டு முதல் - 1999 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தல், 2000 ஆம் ஆண்டின் பொதுத் தேர்தல் உட்பட - சகல தேர்தல்களையும் கண்காணித்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் (CPA), சுதந்திர ஊடக இயக்கம் (FMM), அரசியல் வன்முறைகளுக்கு எதிரான கூட்டமைப்பு ஆகியவை இணைந்தே தேர்தல் வன்செயல்களைக் கண்காணிப்பதற்கான மையத்தை அமைத்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## மோட்டார் சைக்கிளில் இரண்டாம் முறையும் வந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்

### வேட்பாளர் ஜெயக்குமாரின் மரண விசாரணையில் சாட்சியம்

களுவாஞ்சிக்குடி,நவ.19

"மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே எமது வாகனத்தை நோக்கிச் சுட்டனர். சுட்டுவிட்டுப் போனவர்கள் இரண்டாவது தடவையும் வந்து துப்பாக்கிப் பிரயோகம் நடத்திவிட்டுச் சென்றனர்."

- இவ்வாறு, படுகொலை செய்யப்பட்ட வேட்பாளர் ஜெயக்குமாரின் கார்ச் சாரதி தனது சாட்சியத்தில் கூறினார்.

மட்டக்களப்பு கல்லடியைச் சேர்ந்த கதிரமலைநாதன் மோகனதாஸ் (வயது; 29) என்னும் இவர், திடீர் மரண விசாரணை அதிகாரி எஸ். பேரின்பநாயகம் முன்னிலையில் சாட்சியமளித்தார். அவர் கூறியதாவது:-

சம்பவதினம் மட்டக்களப்பிலுள்ள ஐயாவின், இல்லத்திலிருந்து, காலை 9 மணிக்குப் புறப்பட்டோம். குருக்கள மடம் வந்துசேர்ந்ததும் வீடு வீடாகச் சென்று பிரசார நடைமுறைகளை மேற்கொண்டோம். கோயிலொடியில் நடந்த கருத்தரங்கு ஒன்றிலும் கலந்து கொண்டோம். பிற்பகல் 4.30 மணியளவில் எருவில் பகுதிக்கு வந்து சேர்ந்தோம். ஓந்தாச்சிமடம் போக வேண்டும் என ஜெயக்குமார் ஐயா கூறினார். பின்பு ஓந்தாச்சிமடம் சென்று கருத்தரங்கை முடித்துவிட்டு அங்கிருந்து அரைக் கிலோமீற்றர் தூரம் வந்துகொண்டிருந்தபோது சீ.டி.50 மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சுட்டனர். முதலில் சுட்டபோது நான் காரைத் தொடர்ந்து செலுத்திக் கொணடிருந்தேன். அடுத்த தடவை வந்து சுட்டபோது நானும், காரில் வந்த அரசரெட்ணமும் காரை விட்டு இறங்கி ஓடித்தப்பினோம்.

"பின்பு காரை வந்துஎடுத்துக் கொண்டு எருவில் கிராம சேவையாளர் திருச்செல்வம் வீட்டிற்கு வந்தோம். அவரைக் கூட்டிக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு வந்து பொலீஸில முறையிட்டோம்." - என்றார்.

சுட்டுக்கொல்லப்பட்ட ஜெயக்குமாரின் சடலம் அவரின் மனைவியிடம் சனியிரவு ஒப்படைக்கப்பட்டது.

பிரேத பரிசோதனையை மாவட்ட வைத்தியசாலை அதிகாரி டாக்டர் கே.வசீகரன் நடத்தினார்.

கழுத்தில் மூன்றும், வலது நெஞ்சு, இடது நாடி, வலது தொடை,வலது, விலா போன்ற இடங்களிலும் துப்பாக்கிச் சூடு விழுந்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்ட மரணம் என்று மரண விசாரணையில் தீர்ப்பளிக்கப்பட்டது.

களுவாஞ்சிக்குடி உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் தலைமையிலான குழு விசாரணை நடத்தி வருகின்றது.

இந்தப் படுகொலைச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும், சைக்கிளில் வந்த இருவரும் சம்பந்தப்பட்டுள்ளனர் என்றும் -

தாம் வந்த பாதையிலேயே, படுகொலையின் பின் அவர்கள் திரும்பிச் சென்றுள்ளனர் என்றும் -

விசாரணைகளில் தெரியவந்திருப்பதாகப் பொலீஸார் குறிப்பிட்டனர். (உ)

## மஸ்கெலியாவில் தொழிலாளர்களின் 14 லயன் அறைகள் தீயில் கருகின!

### 75 பேர் நடுத் தெருவில்

ஹட்டன்,நவ.18

மஸ்கெலியா சீட்டன் தோட்டத் தொழிலாளர்களின் லயன் ஒன்று நேற்று முற்றாகத் தீக்கிரையானது. தொழிலாளர்களின் உடைமைகள் யாவும் எரிந்து நாசமாகின. அதிஷ்டவசமாக உயிர்சேதம் ஏதும் ஏற்படவில்லை.

தோட்டத் தொழிலாளர்கள் வேலைக்குச் சென்றிருந்த போது காலை 8 மணியளவில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட சேதம் சுமார் 60 லட்ச ரூபாவுக்குமேல் இருக்கும் என தோட்ட நிர்வாகம் தெரிவித்தது. தீப்பற்றிக் கொண்டபோது தீயை அணைக்க மேற்கொண்ட முயற்சிகள் பயன் அளிக்கவில்லை.

தீயை அணைக்க முயன்ற மகேந்திரன் என்ற இளைஞன் தீக் காயங்களுடன் மஸ்கெலியா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டான்.

குடியிருப்புக்களை இழந்துள்ள 14 குடும்பங்களைச் சேர்ந்த 75 பேர் தற்காலிகமாக தோட்டக் கோயிலிலும தொழிற்சாலையிலும் தங்கி இருக்கின்றனர்.

இத் தோட்டம் மஸ்கெலியா நகரில் இருந்து எட்டு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. இப்பிரதேசத்தில் தீயணைப்பு வாகன வசதிகள் இல்லை.

விபத்து தொடர்பாக தோட்ட நிர்வாகியுடன் தொடர்புகொண்டபோது -

"இந்த 14 அறைகளில் ஒரே ஒரு அறைக்கு மட்டுமே சட்ட ரீதியாக மின்சாரம் பெறப்பட்டுள்ளது. மின்சார ஒழுக்கு இந்த தீ விபத்திற்கு காரணமாக இருக்கலாம். குறிப்பிட்ட அந்த அறை மட்டுமே சிறு சேதங்களுடன் தப்பி உள்ளது -

எனத் தெரிவிக்கப்பட்டது.

தீ பிடித்ததற்கான காரணம் உறுதிப்படுத்தப்படவில்லை. மஸ்கெலியா பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (உ)

## தென்கிழக்கு ஆப்கானிஸ்தானில்

# பின்லேடன் உள்ள பகுதியில் சுற்றிவளைத்துத் தேடுதல்!

பெஷாவர்,நவ.19

ஆப்கானிஸ்தானில் ஒஸாமா பின்லேடன் இருப்பதாக நம்பப்படும் பகுதியை சுற்றிவளைத்துள்ள அமெரிக்க, பிரிட்டிஷ் கூட்டுப்படைகள் நேற்று தேடுதல் வேட்டையை ஆரம்பித்தன.

தென்கிழக்கு ஆப்கானிஸ்தானில் 80சதுர கிலோமீட்டர்கள் பிரதேசத்தை அமெரிக்க - பிரிட்டிஷ் சிறப்புப் படைகள் சூழ்ந்துள்ளதாகவும் -

இதன் மூலம் பின்லேடன் பாகிஸ்தானுக்குத் தப்பி விடாமல் தடுக்கப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

முற்றுகையைப் பலப்படுத்தும் அதேவேளை சிறப்புப் படையினர் பின்லேடனைத் தேடும் பணியையும் ஆரம்பித்துள்ளனர்.

அமெரிக்கப் பாதுகாப்புத் துறையின் செய்தித் தொடர்பாளர் இதனை உறுதிப்படுத்தினார். இதனிடையே, பின்லேடனுக்கோ, தலிபான்களின் தலைவர் முல்லா முஹமட் ஒமருக்கோ பாகிஸ்தான் அரசியல் அடைக்கலம் வழங்காது என்று பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சகம் அறிவித்தது.

ஆப்கானிஸ்தானில் பல இன அரசொன்றை அமைப்பது குறித்து அனைத்து ஆப்கான் குழுக்களிடமும் பேச்சு நடத்த ஐநாவின் சிறப்புப் பிரதிநிதி எஸ்.வெண்டினண்ட் நேற்று காபூல் சென்றடைந்துள்ளார்.

இதனிடையே முன்னாள் அதிபர் பர்காநுதீன் ரபானி காபூலுக்குத் திரும்பியதை ஆப்கானின் முன்னாள் மன்னர் ஷாவின் உதவியாளர் அப்துல் சிராக் கண்டித்துள்ளார்.

ரபானி ஆப்கானிஸ்தானின் புதிய ஆட்சியாளராகக் காட்டிக்கொள்ள முயற்சிக்கக்கூடாது என்று சிராக் எச்சரித்துள்ளார். ஆப்கானிஸ்தானில் பல்லின அரசொன்றை அமைக்கும் முயற்சியில் வடக்குக் கூட்டணி மெத்தனமாக இருப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

ஆனால், இதனை மறுத்துள்ள வடக்குக் கூட்டணி அரசியல் தீர்வு ஏற்பட தாம் முட்டுக்கட்டையாக இருக்கவில்லை என்றும் -

ஐநா. மேற்பார்வையில் ஆப்கான் குழுக்களிடையே பேச்சுக்கள் ஓரிரு நாள்களில் ஆரம்பிக்கப்படும் என்றும் - தெரிவித்துள்ளது. (ஓ)




ஆப்கானின் புவியியல் நிலைக்கேற்ப குதிரைகளைப் பயன்படுத்தும் அமெரிக்க கொமாண்டோக்கள்.



காபூல் வீதியில் கிடக்கும் தலிபான் வீரரின் சடலத்தைக் கண்டு திகைக்கும் ஆப்கான் சிறுவன்.



கந்தகாரை விட்டுச் செல்லும் தலிபான்கள்.



ஜலாலாபாத்தில் தகர்ந்து கிடக்கும் பின்லேடனின் வீடு.



ஆப்கானுக்குச் செல்லும் பிரெஞ்சு வீரர்கள்.

# கொசோவா தேர்தலை செர்பியர் புறக்கணிப்பு

பிரிஸ்டினா,நவ.19

யூகோஸ்லாவியாவின் சட்டப் பேரவைக்கு நேற்றுமுன்தினம் தேர்தல் நடைபெற்றது. 1999ஆம் ஆண்டு இந்தப் பிராந்தியம் ஐ.நாவின் நிர்வாகத்துக்குள் வந்தபிறகு நடந்த முதல் தேர்தல் இதுவாகும்.

இந்தத் தேர்தலில் வாக்களித்தால் பெரும்பான்மையினரான அல்பேனியர்கள் அதிகாரம் வெலுத்துவதை ஏற்பது போலாகிவிடும் என்றும் -



தேர்தலில் வாக்களிக்கும் செர்பிய மதகுரு

இந்தப் பிராந்தியம் யூகோஸ்லாவியாவிடமிருந்து விடுதலையடையும் வாய்ப்புக்களை அது அதிகரித்துவிடும் என்றும் - கருதும் சிறுபான்மை செர்பியர்கள் வாக்களிப்பில் அக்கறை காட்டவில்லை.

அதேவேளை வாக்களிப்பில் கலந்துகொண்ட செர்பியர்கள் மிரட்டப்பட்டதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன.

இந்தத் தேர்தலில் செர்பியர்கள் அதிக ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். (ஓ-6)

## தவறான வழிகளில் ஈடுபடுத்தி

# பெற்ற மகள்களை விற்ற பெற்றோருக்குச் சிறை!

## பிரான்ஸ் நீதிமன்றம் விதித்தது

பாரிஸ்,நவ.19

உணவு மற்றும் பணத்துக்காக தமது நான்கு மகள்களையும் கட்டாயப்படுத்தி, தவறான நடத்தையில் ஈடுபடுத்திய பெற்றோருக்கு பிரெஞ்சு நீதிமன்றம் பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட சிறைத் தண்டனை விதித்துள்ளது.

தமது இளவயது மகள்கள் நால்வரையும் அடித்துத் துன்புறுத்தி தவறான வழிகளில் ஈடுபடவைத்ததாக இந்தப் பெற்றோர்மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

நேற்றுமுன்தினம் இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

41வயதான தாய்க்கு 16 வருடங்களும், 43வயதான தந்தைக்கு 12 வருடச்சிறைத் தண்டனையும் அப்போது விதிக்கப்பட்டது.

தமது பெற்றோர் நடந்து கொண்ட கொடூரமான முறை தொடர்பாக நான்கு மகள்களும் நீதிமன்றத்தில் விவரித்த போது, நீதிபதி உட்பட அங்கு கூடியிருந்தவர்கள் கண் கலங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

தாய்மை என்ற புனிதமான உறவை இதைவிட எவரும் கொச்சைப்படுத்தமுடியாது என்றும் -

ஆகவேதான் தந்தையை விடத் தாய்க்கு அதிக தண்டனை வழங்கப்பட்டிருப்பதாகவும் - தீர்ப்பில் குறிப்பிடப்பட்டது. (ஓ-6)

# பலஸ்தீன சுயாட்சி நகரிலிருந்து இஸ்ரேல் படை முற்றாக விலகியது

காஸா,நவ.19

பலஸ்தீனர்களின் சுயாட்சி நகரமான துல்காரத்தில் இருந்து இஸ்ரேலியப் படைகள் நேற்று முன்தினமிரவு முற்றாக விலகிக் கொண்டன.

மேற்காசிய சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்கத்துடன், ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் மட்டத் தூதுக்குழு, மேற்குக்கரைப் பிராந்தியத்துக்கு விஜயம் செய்துள்ள இந்தச் சமயத்தில், துர்காரத்தில் இருந்து இஸ்ரேலியப் படைகள் விலகியுள்ளன.

சுமார் ஒருமாத காலத்துக்கு முன்னர், துர்காரத்திலிருந்து இஸ்ரேலியப் படைகள் விலகத்தொடங்கின.

கடந்த 14 மாதங்களாக மேற்குக் கரை மற்றும் காஸாப் பிரதேசங்களில் பலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்குமிடையிலான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர படை விலகல் நல்ல சகுணம் என்று ஐரோப்பிய ஒன்றியப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதுவரை இந்த வன்முறைகளில் சுமார் ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் பெரும்பாலனவர்கள் பலஸ்தீனர்களாவார்கள்.

இஸ்ரேலியப் படை விலகல் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத், தற்போது நடைமுறையிலுள்ள யுத்த நிறுத்தத்தை நீடிக்கவும், அதைப் பாதுகாக்கவும் தாம் சகல முயற்சிகளையும் மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

(ஓ-6)

## 40 ஆண்டுகளில் முதற்றடவையாக

# கியூபாவுடன் அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம்

லாஹபானா,நவ.19

சுமார் நாற்பது ஆண்டுகளின் பின்னர் முதற்றடவையாக அமெரிக்காவும், கியூபாவும் வர்த்தக ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டுள்ளன.

கியூபா அதிபர் பிடல் காஸ்ட்ரோ இந்த 3கோடி டொலர்கள் வர்த்தக ஒப்பந்தம் குறித்து நேற்று முன்தினம் தனது நாட்டு மக்களுக்கு அறிவித்தார்.

அமெரிக்காவிடமிருந்து உணவுப் பொருள்களையும், மருந்துப் பொருள்களையும், ரொக்கப் பணம் கொடுத்து வாங்குவதற்கு கியூபா தயாராக உள்ளதாக அப்போது காஸ்ரோ குறிப்பிட்டார்.

சுமார் ஒரு கோடி பத்து இலட்சம் மக்களைக் கொண்ட கியூபா மீது அமெரிக்கா கடந்த நாற்பது ஆண்டுகளாகப் பொருளாதாரத் தடையை விதித்துள்ளது.

கியூபாவுக்கு மருந்துப் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு இருந்த தடையை 1993ஆம் ஆண்டு நீக்கியது.

கடந்த வருடம் உணவுப் பொருள் ஏற்றுமதிக்கான தடையையும் அமெரிக்கா அகற்றியது.

அமெரிக்காவின் விவசாய உற்பத்தியாளர்கள் கியூபா மீதான தடைகளை நீக்கவேண்டும் என்று கொடுத்து வந்த அழுத்தம் காரணமாகவே தடைகள் நீக்கப்பட்டன.

தற்போது வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதையடுத்து, அமெரிக்க நிறுவனங்களோ அதிக ஆதாயம் அடையுமென்று பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர். (ஓ-6)

## மன்னிப்புச் சபை. குற்றச்சாட்டு

லண்டன்,நவ.19

காபூலிலுள்ள அப்பாவிப் பொது மக்களைக் காப்பாற்றுவதில் சர்வதேச சமூகம் அக்கறைகாட்டத் தவறிவிட்டதாக சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சாட்டியுள்ளது.

மனித உரிமைக் கரிசனத்தை விட இராணுவ நடவடிக்கைகள் தற்போது அதிக முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை விசனம் தெரிவித்துள்ளது. (ஓ)

# பங்களாதேஷில் இந்து ஒருவர் சுட்டுக் கொலை!

டாக்கா,நவ.19

பங்களாதேஷில் சிறுபான்மை இந்து சமூகத்தைச் சேர்ந்த கல்லூரி அதிபர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை சுட்டுக்கொல்லப்பட்டார்.

சிட்டகொங் நகரில் இடம்பெற்ற இந்தக் கொலைச் சம்பவத்தின் பின்னணியில் ஜமாயத்-இ-இஸ்லாமி என்ற தீவிரவாத மாணவர் அமைப்பு இருக்கலாம் என்று பங்களாதேஷ் பொலீஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

கொல்லப்பட்ட 60வயதான கல்லூரி அதிபர் பங்களாதேஷ் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றவராவார்.

இந்தக் கொலையையடுத்து சிட்டகொங்கில் வன்முறை ஆர்ப்பாட்டங்கள் வெடித்திருப்பதாகக் கடைசியாகக் கிடைத்த செய்திகள் உறுதிப்படுத்தின.

கல்லூரி அரசியல் பகைமை காரணமாகமாகவே அதிபர் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கொலையாளிகள் உடனடியாகக் கைது செய்யப்படவேண்டும் என்று கோரி எதிர்க்கட்சிகள் நேற்று முன்தினம் சிறுபான்மை அமைப்புகளுடன் இணைந்து பேரணி நடத்தின. (ஓ)

## அமெரிக்கா மீதான தாக்குதலால்

# செல்வந்த நாடுகளின் பொருளாதாரம் வீழ்ச்சி

## சர்வதேச நாணய நிதியம் தெரிவிப்பு

உலகில் செல்வந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சி பலவீனமடைந்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. கடந்த செப்ரெம்பர் மாதம் அமெரிக்காவில் இடம்பெற்ற விமானத் தற்கொலைத்தாக்குதலுக்குப் பின்னரே இந்தப் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டதாகவும் நிதியம் குறிப்பிட்டது.

அமெரிக்கா உட்பட செல்வந்த நாடுகளின் பொருளாதாரம் இதுவரை இல்லாத அளவில் திடீர் வீழ்ச்சி கண்டிருப்பதாகவும் -

விமானத் தற்கொலைத் தாக்குதலுக்கு முன்னர் செல்வந்த நாடுகள் வகுத்திருந்த திட்டங்கள் இதனால் தேக்க நிலையை அடைந்துள்ளதாகவும் -

சர்வதேச நாணய நிதியம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

விமானத் தற்கொலைத் தாக்குதலுக்குப் பின்னர் உலகம் முழுவதிலும் பாவனையாளர் மற்றும் வர்த்தகர் நம்பிக்கை பலவீனமடைந்திருப்பதே இந்த நிலைக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

தொடர்ந்தும் இந்த நிலை நீடித்தால், செல்வந்த நாடுகளில் பாரிய பாதிப்புகள் ஏற்படாத போதும், பின்தங்கிய நாடுகளுக்கான உதவித் திட்டங்கள் மற்றும் அபிவிருத்திகள் ஆகியவை ஸ்தம்பிதம் அடையக் கூடும் என்று சர்வதேச நாணய நிதியம் கவலை வெளியிட்டுள்ளது.

(ஓ-6)

## அணு விஞ்ஞானி ஓய்வு

புதுடில்லி,நவ.19

இந்தியாவின் அணு ஆயுதங்கள் அனைத்தும் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் பேணப்பட்டு வருவதாக பிரபல அணு விஞ்ஞானி அப்துல்கலாம் தெரிவித்திருக்கிறார்.

1998இல் பொக்ரானில் மேற்கொள்ளப்பட்ட அணு வெடிப்புச் சோதனையை வழிநடத்திய விஞ்ஞானி அப்துல்கலாம் தற்போது தனது பணியில் இருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

# கூடைப் பந்தாட்டப் போட்டி - 2001

கடந்த 10 வருடங்களாக யாழ்நகரில்

ஹற்றன் நஷனல் வங்கியினால்

நடத்தப்படும்

## கூடைப்பந்தாட்டப் போட்டி

2001 ஆம் ஆண்டும் மாபெரும் போட்டியாக கழகங்கள்/பாடசாலைகளுக்கிடையே இன்று (19.11.2001) திங்கட்கிழமை யாழ்.வேம்படி மகளிர் உயர் கல்லூரி ஆடுகளத்தில் ஆரம்பமாகும் என்பதை அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருவதுடன் போட்டிகளைக் கண்டுகளிக்க வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நேரம்:- பிற்பகல் 3.30 மணி

ஹற்றன் நஷனல் வங்கி

உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி.

(C/19361)


# 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



## பேராசிரியர் செல்லத்துரை பாலச்சந்திரன்

(கலைப்பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்)

நிகழும் விஷு வருடம் ஐப்பசித் திங்கள் 4ஆம் நாள் (20.10.2001) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம் பேராசிரியர் செல்லத்துரை பாலச்சந்திரன் (கலைப்பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்) அவர்கள் சுகவீனமுற்று போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது நிறைந்த வசதிகளை வழங்கி அன்புடன் வைத்திய சேவை புரிந்த வைத்திய நிபுணர்கள், தாதியர், ஊழியர்களுக்கும் இறுதிக்கிரியையின்போது கண்ணீர் அஞ்சலிகள், மலர் வளையங்கள், பத்திரிகை, ஊடகத்துறைகளூடாகவும் தபால், தந்தி, தொலைபேசி மூலமாகவும், நேரில் வருகைதந்து அனுதாபமும் அஞ்சலியும் செலுத்தியோருக்கும், பல்கலைக்கழகத்தில் இறுதி நிகழ்வினை குறுகிய காலத்தில் நிறைவாகச் செய்த பல்கலைக்கழக நிர்வாகத்தினர், ஆசிரியர் சமூகத்தினர், அனைத்துப் பீட மாணவர்கள், ஊழியர்கள் மற்றும் வாத்திய இசை வழங்கிய உடுவில் மகளிர் கல்லூரி மாணவர்களுக்கும் வாகன வசதிகளை வழங்கியோருக்கும் அந்தியேட்டிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (19.11.2001) திங்கட்கிழமை காலை எமதில்லத்தில் நடைபெறவுள்ள சபிண்டீகரணக்கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் பங்குபற்றி நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*192, அரசடி வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

மனைவி, மக்கள்,
மருமக்கள், உறவினர்.

(94649)

# மரண அறிவித்தல்கள்

## சிவபுண்ணியம் குலேந்திரராசா (சந்திரன்)

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபுண்ணியம் குலேந்திரராசா (சந்திரன்) 17.11.2001 சனிக்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் சிவபுண்ணியம் - பூபதி தம்பதியரின் அன்பு மகனும், செல்வலக்சுமி (இணுவில் கிழக்கு மாதர் சங்கத் தலைவி) அவர்களின் அன்புக் கணவரும் பார்த்திபன், சித்திரவனிதா, இராசேந்திரம், கௌரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மாங்கண்டு சீவரத்தினம் அவர்களின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வலக்சுமி (மனைவி)

*இணுவில் கிழக்கு.* (94648)

## முத்தர் கந்தையா (விதானையார்)

(ஓய்வு பெற்ற கிராம சேவையாளர்)

மந்துவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முத்தர் கந்தையா 17.11.2001 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும், சிவகாமசுந்தரி (கொழும்பு), சூரியகுமாரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்வேலி பிரதேச சபை), ஞானச்சந்திரன் (எழுதுநர், மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை), சிவஞானசுந்தரி (ராதா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீஸ்கந்தராஜா (சுவிஸ்), தனபாக்கியம் (எழுதுநர், தென்மராட்சி, பிரதேச செயலகம்), கமலேஸ்வரி (ஆசிரியை, சரசாலை ஸ்ரீகணேசா, சாவகச்சேரி இந்துக் கல்லூரி), நித்தியானந்தன் (ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், செந்தூரன் (லண்டன்), சிந்துஜா (கொழும்பு), தாசிகா, தஜீபன், தர்மிகா, விவேந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (18.11.2001) ஞாயிற்றுக்கிழமை அளவெட்டி தெற்கில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

நிரந்தர முகவரி:
*மந்துவில் மேற்கு, கொடிகாமம்.*
தற்காலிக முகவரி:
**VEL - INN**
*அளவெட்டி தெற்கு, அளவெட்டி.*

தகவல்:
க. நித்தியானந்தன் (மருமகன்)
(ஆசிரியர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி) (94651)

# கலைப் பாலத்தில் இன்று 'தரிசனம்'

யாழ்ப்பாணம்,நவ.19

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் "கலைப்பாலம்" நிகழ்ச்சியில் இன்று திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு "தரிசனம்" என்ற மௌன நாடகம் மேடையேற்றப்படவுள்ளது.

திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெறும் இந்த நாடகத்தை ஆர்வமுடையவர்கள் கலந்துசிறப்பிக்குமாறு மன்றப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

(க-6)

# யாழ். மக்களை திணறடிக்கும் வேட்பாளர்கள்!

யாழ்ப்பாணம்,நவ.19

யாழ்குடாநாட்டில் வாக்குவேட்டை நடத்துமுகமாக கட்சிகளின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் சூடுபிடித்து வருகின்றன.

வீடு வீடாகச் செல்லும் வேட்பாளர்களும் கட்சிகளின் ஆதரவாளர்களும் வாக்குறுதிகளை மாறி மாறி அள்ளி வீசி மக்களைத் திணறடித்து வருகின்றனர்.

(க-6-72)

# திருமலையில் இரவில் நடந்த சுற்றிவளைப்பு

திருகோணமலை,நவ.19

திருகோணமலை உவர்மலைப் பகுதியில் சனிக்கிழமை இரவு 9 மணியளவில் இராணுவத்தினரது உதவியுடன் பொலீஸாரால் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தப்பட்டது. உவர்மலை ஆளுநர் அலுவலக வீதியும், மத்திய வீதிப் பகுதியுமே சோதனைக்கு உள்ளாக்கப்பட்டன.

வழக்கத்துக்கு மாறாக இரவில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பால் சில மணித்தியாலங்கள் பதற்றம் நிலவியது. வீதியால் சென்ற பாதசாரிகள் தடுத்து நிறுத்தப்பட்டு சோதனையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

பொலீஸ் பதிவு இல்லாத இருவர் இரவு கைது செய்யப்பட்டனர்.

(க-145)

# வலி.மேற்கில் 5 பொதுக் கிணறுகள் புனரமைக்கப்படும்

மூளாய்,நவ.19

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் ஐந்து பொதுக் கிணறுகள் புனரமைக்கப்படவுள்ளன.

அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தின் நுண்கருத்திட்டத்தின் கீழ் இப்புனரமைப்புப் பணிகளுக்கான நிதி உதவி கிடைக்கவுள்ளது.

மூளாய் கிராம உத்தியோகத்தர் பிரிவில் மூன்று கிணறுகளும் சங்கானையில் இரண்டு கிணறுகளும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

(க-99)

# கிராமிய கைத்தொழில் அபிவிருத்திச் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.19

தென்மராட்சி ஒருங்கிணைந்த கிராமிய கைத்தொழில் அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் புதிதாக தொழில் தொடங்க விரும்புபவர்களும் கலந்துகொள்ளலாம் என்றும், அங்கத்தவர்களின் பதிவுகளும் தொழில் அபிவிருத்தி ஊக்குவிப்பு செயல் திட்டம் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதால் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறும் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

(க-6)


**BRIGHTMAN**

பிறவுண்வீதி, நீராவியடி, யாழ்நகர்.

**G.C.E O/L** மாணவர்களுக்கான

இலவசக் கருத்தரங்கு

ஆங்கிலம்

தேசிய கல்வி நிறுவனத்தில் இருந்து பெறப்பட்ட வழிகாட்டியில் இருந்து *அச்சடித்த வினாக்கள் - விலை 15/=*

*ஆரம்பம்* :- 20.11.2001 Tues.- 3 p.m

(அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன)


# கல்விச்சாலைக் காட்சிகள்



காரைநகர் மத்தி கல்வி வளர்ச்சிக் கழகத்தினால் அண்மையில் வாணி விழா நடத்தப்பட்டது.

இந்த விழாவில் பிரதமவிருந்தினர்களாகக் கலந்துகொண்ட பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி, தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழாவைத் தொடக்கி வைப்பதைப் படத்தில் காணலாம்.

*(படம்: காரைநகர் செய்தியாளர்)*



ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன.

பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட உடுவில் கல்விக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் அ.தற்பரானந்தன் உரையாற்றுவதை படத்தில் காணலாம். அருகில் பாடசாலை அதிபர் ந.சுப்பிரமணியம் அமர்ந்துள்ளார். (ஐ-86)



தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய பரிசளிப்பு விழா, லண்டன் நற்பணி மன்ற ஆதரவில் அண்மையில் நடைபெற்றது. இவ்விழாவில் செல்வச்சந்நிதி ஆலயப் பிரதம குரு த.குகனேந்திரன் ஐயர், வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் பாடசாலை அதிபர் என்.அரியரத்தினம், எழுதுமட்டுவாழ் அ.த.க.பாடசாலை அதிபர் ச.செல்வச்சந்திரன், வடமராட்சி பிரதிக் கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் ஆகியோரும் காணப்படுகின்றார்கள்.

*(படம்:நெல்லியடிச் செய்தியாளர்)*



உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் வாணிவிழாவும் பெற்றோர் தினமும் அண்மையில் கொண்டாடப்பட்டது.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் மங்கள விளக்கேற்றுவதையும் -

நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.ஜே.விஜயரட்ணம், வித்தியாலய அதிபர் சு.யோகராசா ஆகியோர் அருகில் நிற்பதையும் காணலாம். (ஐ-10)

## உதயன்

### தென்னிலங்கை மக்களின் பொறுப்பு

"ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம இன்றியே அந்த அரசுடன் பேசத் தயார்!" என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர் தலைவர் வே.பிரபாகரன வெளிப்படுத்தியுள்ளார் என 'டெய்லி ஸ்ரார' பத்திரிகை தனது இணையத் தளச் செய்தியில் தெரிவித்திருக்கின்றது.

இந்தத் தகவல் உண்மையானால், அண்மைக்காலத்தில் மூன்றாம தரப்பின் மத்தியஸ்தம் இன்றி, இலங்கை அரசுத் தரப்போடு பேச்சு நடத்துவது குறித்து புலிகளின் பக்கத்தில் இருந்து கிடைத்த முதலாவது சமிக்ஞையாக இதனைக் கொள்ளலாம்.

இதேவேளை -

"தமது இயக்கம் மீதான தடையை நீக்கினால், ஸ்ரீலங்காவில் புதிதாக அமையக்கூடிய ஐ.தே.கட்சி அரசுடன புலிகள் பேசுவார்கள்." - என்று தீவிர புலிகள் சார்புப் போக்குள்ள 'தமிழ் கார்டியன' சஞ்சிகை தனது ஆசிரிய தலையங்கத்தில் சுட்டிக்காட்டி இருக்கின்றது.

இத்தகவல்கள் சில முக்கிய விடயங்களைக் கோடிகாட்டுகின்றன.

முதலாவதாக -

இனப்பிரச்சினைக்கு உண்மையான - நீதியான - நிலைத்த - விட்டுக்கொடுப்புகளுடன் கூடிய - தீர்வு ஒன்றைக் காண விரும்பும் ஆவலுடன் வருகின்ற சிங்கள அரசுகளோடு, அமைதிப் பேச்சு நடத்தி, சமாதானத் தீர்வு காண விடுதலைப் புலிகள் இன்னும் தயாராக இருக்கின்றார்கள்.

இரண்டாவதாக -

அமைதித் தீர்வு ஒன்று எட்டுவதானால் தெற்கில் இராணுவத் தீர்வில் முனைப்பற்ற - சமாதான வேட்கையுள்ள - ஓர் ஆட்சி தேவை. அதற்கான மாற்றத்துக்கு தமிழ் மக்களும் சேர்ந்து செயற்படவேண்டி இருக்கும்.

மூன்றாவதாக -

நேரடிப் பேச்சு - மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இன்றி - நடத்துவதற்கு புலிகள் தயாராக இருக்கின்றார்கள்.

இவற்றையே புலிகளின் தற்போதைய போக்கு வெளிப்படுத்தியிருக்கின்றது.

இலங்கை உள்விவகாரத்தில் இந்தியா தலையிட்டு, அமைதிப்படை என்ற பெயரில் இங்கு வந்திறங்கிய போது, அதை ஆட்சேபித்து தெற்கில் கிளர்ச்சி நடத்தியவர்கள் தான் இப்போது நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் - மூன்றாம் தரப்பு ஏற்பாட்டாளர்கள் மூலம் - நடந்தப்படக் கூடிய அமைதிப் பேச்சை முழுமூச்சாகக் கண்டிக்கின்றார்கள்; எதிர்க்கின்றார்கள். நோர்வேயின் பங்களிப்பை அந்நியத் தலையீடு என்று சீறுகின்றார்கள்.

இலங்கை விடயத்தில் இந்தியா தலையிட்ட சமயம் இவர்கள் தெற்கில் இந்தியாவுக்கு எதிராகப் பேரணி நடத்தி, இந்தியப் பொருள்களைப் பகிஷ்கரிக்குமாறு கோரி ஆர்ப்பாட்டங்களைச் செய்தபோது -

இந்தியப் படைகளுக்கு எதிராக - தமது இன்னுயிரைத் தியாகம் செய்து - நேரடியாகக் கடும்போர் புரிந்ததன் மூலம், அந்நியத் தலையீட்டுக்கு எதிரான தமது நிலைப்பாட்டைத் திட்டவட்டமாக - தங்கள் உயிரையும் இரத்தத்தையும் தியாகம் செய்து - வெளிப்படுத்தியவர்கள் புலிகள்.

இப்போதும் இலங்கை விவகாரத்தில் அந்த அந்நியப் பங்களிப்புப் பற்றிய தமது நிலைப்பாட்டை அவர்கள் மீள் உறுதி செய்திருக்கின்றார்கள்.

உண்மையான - ஒளிவு மறைவற்ற - வஞ்சகத் திட்டமில்லாத - வேறு உள்நோக்கமற்ற - வகையில் இலங்கை அரசு பேச்சுக்கு வருமானால் -

திறந்த மனதோடு நேரடிப் பேச்சு நடத்தப் புலிகள் பின்னிற்கமாட்டார்கள். அதற்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமோ, அந்நியப் பங்களிப்போ அவசியமற்றது என்பது அமைதித் தீர்வுக்கு - சமாதான முயற்சிகளுக்கு - எதிராகக் கிளர்ந்து நிற்கும் தென்பகுதித் தீவிரவாதப் போக்கு சிங்களவர்களுக்கு இந்தத் தகவல் மூலம் உணர்த்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் -

இந்த நல்ல சந்தர்ப்பத்தை நேர்க்கி நகருவது, அதற்கேற்ற சூழ்நிலையைத் தெற்கில் ஏற்படுத்தக் கூடியதான மாற்றங்களை ஆட்சியிலும் களத்திலும் ஏற்படுத்திக்கொடுப்பது தெற்கு மக்களின் - குறிப்பாக பெரினவாத சிங்களவர்களின் - பொறுப்பாகுகின்றது.

## பல் வைத்தியரை நியமிக்கக் கோரிக்கை

சண்டிலிப்பாய்,நவ.19

வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலையில் உள்ள பற்சிகிச்சைப் பிரிவு கடந்த இரு மாதங்களாக இயங்காத நிலையில் இருந்து வருகின்றது. இதனால் இப்பகுதியிலுள்ள பல் நோயாளர்கள் பற்சிகிச்சையைப் பெறமுடியாது மிகவும் சிரமப்படுகின்றனர்.

இங்கு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வந்த பல் வைத்தியர் இரு மாதங்களுக்கு முன்னர் யாழ். அரசினர் போதனா வைத்தியசாலை பற்சிகிச்சைப் பிரிவுக்கு நியமனம் பெற்றுச் சென்றுவிட்டார் என்றும் -

அவரின் இடத்திற்கு இதுவரை வேறு எவரும் நியமிக்கப்படவில்லை என்றும் -

வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

இவ்வைத்தியசாலையின் பற்சிகிச்சைப் பிரிவை இயங்க வைப்பதற்காக பல் வைத்திய அதிகாரி ஒருவரை நியமித்து உதவுமாறு இப்பகுதியிலுள்ள பொதுநல அமைப்புகள் யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளரைக் கடிதம் மூலம் கேட்டுள்ளன. (ஐ-135)

## மின் வயர்கள், உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன

சண்டிலிப்பாய்,நவ.19

பண்டத்தரிப்பு சென்.மேரிஸ் வீதியிலுள்ள வீடு ஒன்றில் திருட்டு மின்சாரம் பெற்றுவந்தமை மின்சார சபை ஊழியர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

இச்சட்டவிரோத மின்பாவனைக்குப் பயன்படுத்தப்பட்ட மின்வயர்களும் மற்றும் உபகரணங்களும் மின்சார சபை ஊழியர்களினால் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை -

அராலி வடக்கு, சுழிபுரம் மேற்கு, பெரியபுலோ ஆகிய இடங்களிலும் இவ்வாறு திருட்டு மின்சாரம் பெற்று வந்தது கடந்தவாரம் மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டது. (க-135)

## நாட்டு நடப்பு

களவு - IV

**பிற்பொக்கற் அடித்து பெரும் தனவந்தனாய் மாறியவன்**
**அற்புதமாய் செல்வம் அபகரித்தான் - பின்புறமாய்**
**"கான்சரெனும்" நோய் கடுமையாய் பரவிவிட**
**மாண்டான் மனது மிக நொந்து.**

*- விகடகவி.*

# வெளியுலகுக்கு அவலங்களைத் தெரியப்படுத்துவதால் குடாநாட்டு மக்களின் நெருக்கடிகள் குறைகின்றன

## ஆண்டு நிறைவுக் கூட்டத்தில் இணையப் பிரதிநிதி உரை

யாழ்ப்பாணம்,நவ.19

யாழ்.குடாநாட்டில் அவ்வப்போது ஏற்படும் நெருக்கடிகள் - அவலங்களை - வெளியுலகுக்கு தெரியப்படுத்துவதாலும் சம்பந்தப்பட்டோருக்கு அழுத்தத்தைக் கொடுப்பதன் மூலமும அவ்வாறான நிலைமையைத் தளர்த்தி பொதுமக்களை பொருளாதாரக் கஷ்டங்களில் இருந்து பாதுகாப்பதில் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தீவிர தொண்டாற்றி வருகின்றது. பொதுமக்களுக்கு ஏற்படும் நெருக்கடிகளும் குறைகின்றன.

- இவ்வாறு அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் 11ஆவது ஆண்டு நிறைவுப் பொதுக்கூட்டம் கடந்த 15ஆம் திகதி யாழ்.கோயில் வீதியில் அமைந்துள்ள இணைய அலுவலகத்தில் நடைபெற்றது.

இப்பொதுக்கூட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த 50இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இன்றைய போர்க்காலச் சூழலில் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் மகத்தான சேவையை ஆற்றி வருகின்றது. யாழ்.குடாநாட்டில் உள்ள மக்களுக்கு அரசினால் வழங்கப்படுகின்ற நிவாரணத்தை நிறுத்துவதற்கு கடந்த ஆண்டில் நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டபோது அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் கொடுத்த கடுமையான அழுத்தத்தினால் மேற்படி நடவடிக்கை முற்றாக கைவிடப்பட்டது.

எமது இணையத்தினூடாக வெளிநாட்டு நிறுவனங்கள் யாழ்.குடாநாட்டில் பல்வேறு திட்டங்களை செயற்படுத்தி வருகின்றன. தற்போது குடாநாட்டில் நிலவிவரும் எரிபொருள் தட்டுப்பாடு, மின்சாரத்தடை ஆகியவற்றை நீக்குவதற்கும் இணையம் தனது அழுத்தங்களைக் கொடுப்பதுடன் சம்பந்தப்பட்டோருடன் தொடர்புகளையும் ஏற்படுத்தியுள்ளது.

- இவ்வாறு இணையத்தின் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் அடுத்த ஆண்டு தலைவராக எஸ்.நல்லதம்பி தெரிவு செய்யப்பட்டார். (க-ரி)

## அச்சுவேலியில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடுவதில் தாமதம் ஏன்?

அச்சுவேலிப்பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பு ஊசி போடும் நடவடிக்கை தாமதமாகி வருவது ஏன் என்று பொது மக்கள் தரப்பில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக அச்சுவேலிப் பகுதியில் விசர் நோய்த் தடுப்பு மருந்து ஏற்றப்படாத நிலை குறித்தும் இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் பொருத்தமான நடவடிக்கை எடுக்காமல் இருப்பது குறித்தும் பொது மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (க-11)

## உள்ளக மருத்துவர் நியமனங்கள் இடைநிறுத்தப்பட்டதாக அறிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.19

உள்ளக மருத்துவ அதிகாரிகளுக்கான நியமனங்கள் வழங்குவது இடைநிறுத்தப்பட்டிருப்பதாக சுகாதார சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பல்கலைக்கழகங்களில் 1994/95 கல்வியாண்டில் கற்று பட்டம் பெற்றவர்கள் மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் மருத்துவக் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்து பட்டம் பெற்றவர்கள். ஆகியோருக்கு இன்று திங்கட்கிழமை நியமனம் வழங்கப்படவிருந்தது குறிப்பிடத்தக்கது. (ம-4)

### சுகாதாரச் சீர்கேடான முறையில்

## பாண் விநியோகம் செய்த 7பேருக்கு மல்லாகம் நீதிமன்றம் அபராதம்

வலிகாமம்தெற்கு,நவ.19

சுகாதாரச் சீர்கேடான முறையில் விற்பனை நிலையங்களுக்குப் பாண் எடுத்துச்சென்றமைக்காக ஏழு பேக்கரிகளைச் சேர்ந்த விநியோகஸ்தர்களுக்கு மல்லாகம் நீதிமன்ற நீதிவான 500 ரூபா தொடக்கம் ஆயிரத்து 500 வரை அபராதம் விதித்துள்ளார்.

சுன்னாகம், மருதனார்மடம் மற்றும மல்லாகம் உட்பட்ட பகுதிகளில் பாண் எடுத்துச்சென்ற பாண் விநியோகத்தர்கள், சுகாதாரமற்ற முறைகளில் பாணைக்கொண்டு சென்றமை அவதானிக்கப்பட்டது.

சுகாதாரப் பரிசோதகர்கள் குழுவினர் மேற்கொண்ட திடீர் பரிசோதனைகளின்போது இவர்கள் சிக்கிக் கொண்டனர்.

அசுத்தமான பெட்டிகளில் பாண் எடுத்துச்சென்றமை, சீர்கேடான - சுகாதாரமற்ற முறையில் பாணை உறையிட்டுச் சென்றமை, சுகாதாரக் குறைபாடுடைய உடைகளுடன் பாணை எடுத்துச்சென்றமை போன்ற குற்றங்களுக்காக இந்த ஏழுபேரும் நீதிவான் முன்னிலையில் நிறுத்தப்பட்டனர்.

மனித பாவனைக்கெனப் பாண் துப்புரவான முறையில் தயாரிக்கப்பட வேண்டும்; அவற்றைச் சுகாதார முறைப்படி பேணி விநியோகிக்க வேண்டும்; மக்களுக்குத் தீங்கு தரக்கூடிய முறையில் எதிர்காலத்தில் பாண் விநியோகம் செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் கடுமையான தண்டனைகள் வழங்கப்படும் என நீதிவான் தனது தீர்ப்பின்போது குற்றவாளிகளுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த மூன்று பேக்கரிகள், மல்லாகத்தைச் சேர்ந்த இரண்டு பேக்கரிகள், உடுவில், உரும்பிராய் பகுதிகளைச் சேர்ந்த தலா ஒவ்வொரு பேக்கரிகளைச் சேர்ந்த மொத்தம் ஏழு பாண் விநியோகஸ்தர்கள்மீது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதாரமற்ற முறையில் பாண் விநியோகம் செய்தமைக்காகக் குற்றஞ் சுமத்தியிருந்தனர். (க-152)

## கோண்டாவிலில் நாய்கள் அழிப்பு நடவடிக்கை

கோண்டாவில் மேற்கு, கிழக்கு ஆகிய பகுதிகளில் நாளைமறுதினம் புதன்கிழமை கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதால், வளர்ப்பு நாய்களைக் கட்டி வைக்குமாறு நல்லூர்ப் பிரதேச சபையின் செயலாளர் அறிவித்துள்ளார்.

நாய்களுக்குரிய உரிமத்தகடுகள் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் நாய்கள் பிடிக்கப்படமாட்டா எனவும் அவர் தெரிவித்திருக்கிறார். (க-180)

## கோழிக்குஞ்சு விநியோகம்

வலிகாமம்தெற்கு,நவ.19

வலிகாமம் தெற்கு உடுவில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்படவுள்ளன.

புறோயிலர், லேயர் வகை பேட்டுக் குஞ்சுகளும் சேவல் குஞ்சுகளும் விநியோகிக்கப்படவுள்ளன.

ஏற்கனவே பதிவு செய்த பண்ணையாளர்களுக்கு இவை வழங்கப்படும்.

அத்துடன் மேற்படி சங்கத்தின் மூலம் நல்லின தேசி, தோடை மற்றும் மாங்கன்று போன்ற மரக்கன்றுகளும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. (ஐ-152)

## நாளை

கார்த்திகை 5
செவ்வாய்க்கிழமை
திதி : பஞ்சமி
பிற்பகல் 1.06 வரை.
நட்சத்திரம் : உத்தராடம்
பின்னிரவு 12.56 வரை.
சுபநேரம் : 10.39 - 12.00
ராகுகாலம் : 3.09 - 4.39
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

பிறரிடத்தில் இருந்து நீ என்ன எதிர்பார்க்கிறாயோ, அதையே நீ பிறருக்குக் கொடு!

## திருமலையில் அநாமதேய பிரசுரங்கள்!

திருமலை,நவ.19

நாடாளுமன்ற பொதுத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் திருகோணமலையில் வெவ்வேறு தரப்பினராலும் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

தம்மை யாரென்று இனங்காட்டிக் கொள்ளாமல் வெளியிட்டுவரும் இந்தப் பிரசுரங்களில் ஒரு கட்சியைக் குற்றஞ்சாட்டி, குறைகள் கூறி முடிவில் குறிப்பிட்ட கட்சியை ஆதரியுங்கள் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதன் மூலம் அத்துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டவர் யார் என்பதை ஊகிக்கமுடிகிறது.

"சங்கிலியன் படை" என்ற பெயரில் வெளியாகிய துண்டுப்பிரசுரம் "தமிழர் பிரதிநிதித்துவம் நிச்சயம் பேணப்பட வேண்டும்" என்ற சாராம்சத்தைக் கொண்டிருந்தது.

"எல்லாளன் படை" என்ற பெயரில் வெளியான துண்டுப் பிரசுரத்தில் கூட்டுச் சேர்ந்த தமிழர் ஐக்கிய கூட்டமைப்பை ஆதரிக்கும்படி கேட்கப்பட்டிருந்தது.

இந்தப் பிரசுரங்களை விடுதலைப் புலிகள் வெளியிட்டதாக மக்களை நம்பவைக்கும் நோக்கோடு தமிழர் விடுதலை கூட்டணியே வெளியிட்டிருக்க வேண்டும் என்று ஏனைய கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

அதேசமயம் "பொது மக்கள்" பெயரிலும் ஒரு துண்டுப்பிரசுரம் வெளியாகியுள்ளது.

மாணவர்கள், சிறுவர்களை புலிகள் பலாத்காரமாக சேர்த்து பலிக்கடாவாக்குவதாகவும் புலிகள் இயக்கத்தில் சேரவேண்டாம்...." என்ற சாரப்பட இந்தத் துண்டுப்பிரசுரம் அமைந்திருந்தது. (க-145)

## மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

வலிகாமம் தெற்கு,நவ.19

தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் பெயரால் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சிவாச்சிரமத்தைச் சேர்ந்த சித்ரூபானந்தா சுவாமிகள் மேற்படி வித்தியாலயத்துக்கு வருகைதந்து மாணவர்களுக்கான இப்புலமைப் பரிசில்களை வழங்க உள்ளார்.

வித்தியாலய அதிபர் எஸ்.சிவேஸ்வரன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறும். (ஐ-152)

### வடமராட்சியில் மீனவக் குடும்பங்களுக்கு நிவாரணக் கொடுப்பனவு

வடமராட்சிக் கடலில் மீன்பிடிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட 4ஆயிரத்து 300 குடும்பங்களுக்கு பாதிப்பு நிவாரணக் கொடுப்பனவுகள் கடந்த புதன்கிழமை தொடக்கம் அந்தந்தப் பகுதிகளில் வைத்து வழங்கப்பட்டுவருகின்றன.

குடும்பத்தின் உறுப்பினர் எண்ணிக்கைக்கு ஏற்ப ஓர் அங்கத்தவருக்கு தலா 500 ரூபா வீதம் இக்கொடுப்பனவு வழங்கப்பட்டுவருகிறது.

கடந்த ஓகஸ்ட் 30ஆம் திகதி தொடக்கம் மீன்பிடிக்கத் தடை செய்யப்பட்ட தொண்டமானாறு தொடக்கம் திக்கம் வரையிலான பகுதிகளில் பாதிக்கப்பட்ட 756 குடும்பங்களுக்கு கடந்த புதன்கிழமை கொடுப்பனவு வழங்கப்பட்டதாகவும், கடல் தடையினால் பாதிக்கப்பட்ட ஏனைய பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களுக்குப் இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகவும் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபை ஊடாக இக் கொடுப்பனவுக்கான நிதியை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-117)

உ

முருகன் துணை.

## நெல்லியடி தடங்கன் புளியடி முருக மூர்த்தி ஆலய

### கந்தசஷ்டி 5ஆம் நாள் உற்சவம்

**20.11.2001 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.45 மணிக்கு 108 கலச சங்காபிஷேகக் கிரியைகளுடன் ஆரம்பமாகும்.**

பிற்பகல் 1 மணிக்கு தவில் நாதசுரவித்துவான்கள்

**R.கேதீஸ்வரன் V.K.பஞ்சமூர்த்தி L.S.ஜெயநாதன்**

குழுவினர் இணைந்து வழங்கும்

நாதசுர பஞ்சாமிர்தம்

*அனைவரும் வருக!*

*அருளமுதம், நாதசுர பஞ்சாமிர்தம் பெறுக!!*

உபயகாரரும்,
பரிபாலன சபையினரும்.

(94626)


## ஐக்கிய தேசியக் கட்சி



யாழ். மாவட்ட வாக்காளப் பெருமக்களே!

பணிவான வேண்டுகோள்..!

தமிழர்களின் இந்தப் புனிதமான மாதத்தில் உங்கள் வாக்கை கேட்க எனக்கு உரிமை உண்டு.

| | |
|---|---|
| (யானை) | X |
| இல.10 | X |

**சி. கணபதிப்பிள்ளை**

30 வருட கூட்டுறவுச் சேவையாளரும், அரசாங்க ஓய்வூதியம் பெறுபவரும்.

(93924)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

### ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



பூவுலகில்
1954
-
11
-
03

புகழுலகில்
2001
-
10
-
20

திருமதி

**தம்பிரெத்தினம் சோதிலட்சுமி (தேவி)**

பாசத்தின் இருப்பிடமாய்!
பண்பின் உறைவிடமாய்!
நேசமுடன் எமை வளர்த்து
தேசம் புகழ வைத்த
எம் தெய்வத்துக்கு எமது அஞ்சலி!

இன்று (19.11.2001) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
கணவர் (ஜேர்மனி)
பிள்ளைகள், சகோதரர்கள்,
மைத்துனர் குடும்பம்.

*555/27 பருத்தித்துறை வீதி,*
*நல்லூர்.*

(94640)

## அதிக குளிசைகளை உட்கொண்ட இளைஞர் மரணம்

தென்மராட்சி,நவ.19

நோயின் உபாதையால் பாதிக்கப்பட்ட இளைஞர் அதிகளவு குளிசைகளை உட்கொண்டு மரணமடைந்த சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை கரவெட்டி மத்தியில் இடம்பெற்றது.

மிருசுவில் வடக்கைச் சேர்ந்த சிவானந்தராசா சிவதீஸ்வரன் (வயது 24) என்னும் இளைஞரே மரணமானவராவார்.

ஆபத்தான நிலையில் மந்திகை ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரும் வழியில் அவர் மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது. (க-117)

## இவ்வருடத்தில் மிதிவெடிகளில் சிக்கி 81 பேர் கால் இழப்பு

யாழ்ப்பாணம்,நவ.19

இவ்வருடத்தின் முதல் பத்து மாதங்களில் 81 பேர் மிதிவெடிகளில் அகப்பட்டு கால்களை இழந்தும், அங்கவீனர்களாகியும் உள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த செப்ரெம்பர் மாதத்தில் மட்டும் 17 பேர் மிதிவெடியில் அகப்பட்டு படுகாயமடைந்ததாகவும், மிதிவெடியில் கணிசமான அளவு மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-117)

## சிப்பாய் பிணையில் விடுவிப்பு

தென்மராட்சி,நவ.19

1996ஆம் ஆண்டு பளை ஆனைவிழுந்தான் பகுதியில் குடும்பப் பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுப் பலாலி இராணுவப் பொலீஸாரின் பாதுகாப்பில் கடந்த ஐந்து வருடங்களாக வைக்கப்பட்டிருந்த படைச்சிப்பாய் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அன்ரனி கிறிஸ்ரி நிமல் என்ற இந்தச் சிப்பாய் கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவானால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதியின் உத்தரவைஅடுத்தே சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டார். (க-117)

## வீதி சேதத்தால் அடிக்கடி விபத்துக்கள்

சண்டிலிப்பாய்,நவ.19

பண்டத்தரிப்புச் சந்தைக்குச் சமீபமாகவுள்ள பிரதான வீதியில் வீதி சேதமடைந்து குழிகள் பல காணப்படுகின்றன. இதனால் இவ்வீதியில் அடிககடி வாகன விபத்துக்கள் இடம்பெற்றுவருகின்றன.

இதேவேளை - பண்டத்தரிப்புச் சந்தியில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக்கு முன்பாக வெள்ள நீர் ஓட முடியாது தேங்கி நிற்பதால் மக்கள் சிரமமடைந்துவருகின்றனர். இப்பகுதியில் பஸ்தரிப்பு நிலையமும் உள்ளதால் பிரயாணிகளும் கஷ்டமடைகின்றனர்.

வெள்ள நீர் வழிந்தோடுவதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-135)

## பிரிவுபசார வைபவம்

யாழ்ப்பாணம்,நவ.19

சங்கானை தபாலகத்தில் கடந்த 12 வருடங்களாகத் தபாலதிபராகக் கடமையாற்றிப் பதவி உயர்வு பெற்று தற்போது யாழ்.பிரதம அஞ்சலகத்தில் கடமையாற்றும் ம.டெனிசியஸுக்கு சங்கானை அஞ்சல் அதிபர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் அண்மையில் பிரிவுபசார வைபவத்தை நடத்தினர். (ஐ)

## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

**சுன்னாகம் வர்த்தக சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் இரவுப் பாதுகாப்புச் சேவைக்கு உடனடியாக இருவர் தேவை. விரும்புபவர்கள் எதிர்வரும் (21.11.2001) புதன் கிழமை காலை 10.00 மணிக்கு (புதியநேரம்) சுன்னாகம் வர்த்தக சங்கப் பணிமனைக்கு ஆவணங்களுடன் சமுகமளிக்கவும்.**

ந.சண்முகவேல்
*செயலாளர்.*

ந.அரசரத்தினம்
*தலைவர்.*

(94635)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
10
-
04
-
1941



ஆண்டவன் பாதத்தில்
30
-
11
-
2000

### அமரர் முருகேசு விசுவலிங்கம்

(சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர், காங்கேசன்துறை)

திதி: சதுர்த்தி

*என் ஆருயிர்த் தெய்வமே அப்பா!*
*என்னையும் பிள்ளைகளையும்*
*என்றும் உமது பாசவலை*
*ஏங்கித் தளம்ப வைக்கிறதே!*
*எப்போ காண்போம் இங்கே?*

*உங்கள் ஆத்மா சாந்தி பெற வேண்டுகிறோம்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்,
மைத்துனர், மைத்துனிமார்,
மக்கள், மருமக்கள்,
உற்றார், உறவினர்.

*அரசினர் வைத்தியசாலை,*
*தெற்கு தெல்லிப்பழை,*
*கிழக்கு.*

(94620)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08
-
12
-
1973



மறைவு
01
-
12
-
2000

### சின்னத்துரை முரளீதரன் (ரவி)

**திதி: 19.11.2001**

*பூவொன்று உதிர்ந்து புவியில் வீழ்ந்தது*
*அன்பே உயிரே! அஞ்சலித்தோம் ஆண்டு*
*ஒன்று இருளில் அகன்றது புயலிடை*
*வருந்தினோம். வதையுற்றோம் மீண்டு*
*வாராயோ நீ? காலையொன்று முடிந்து இருள்*
*கவிவது போல் பாதி வாழ்வில் போயினையோ?*
*துயர் கொண்டோம்! துடித்தோம் விண்மீன்*
*ஆயினையோ? ஏங்கும் மனதும் விழிநீர்*
*சொரியும் தாங்காது நினைவு ஓங்கும்*
*பாங்காய் வாழ்ந்தாய்! பண்பின் இருப்பிடம்*
*நீயெனவே பிறர் சொன்னார்! யாவும்*
*பொய்யாயினவே! சுவைசேர் கவியாடல் ஒன்று*
*குறையாய் முடிந்து அரங்க மூடிற்று*
*வாழ்வெனும் நாடகம் பாதியில் முடிந்தது*
*நீர்வை விநாயகன் பதத்தில் அமைதி பெறுகவே!*

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அக்கா, அண்ணா
மற்றும் உறவினர், நண்பர்கள்.

*நீர்வேலி மத்தி,*
*நீர்வேலி.*

(94558)




## என்றும் உங்கள் சேவைக்காக...

தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்

# திரு. சி.சிவமகாராசா

| | |
|---|---|
| (உதயசூரியன்) | X |
| 11 | X |

அவர்களுக்கே எம் வாக்கு.

(93916)

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2001

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்
## யாழ்.மாவட்ட தமிழ் வேட்பாளர்




நிரந்தர சமாதானத்துக்கும்
தமிழ் பேசும் மக்களின்
அரசியல் அபிலாஷைகளுக்கு
நீதியான தீர்வு காணவும்
தமிழர் உரிமைப் போராட்டத்துக்கு
நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பவும்...

விலை போகாத,
துரோகமிழைக்காத,
துணிவுடன் போராடும்
ஒருவரை நாடாளுமன்றம் அனுப்புங்கள்.

அவர்தான் ஞானசுந்தரம் ஆனந்தகுமார்


94ஆம் ஆண்டுக்குப் பின் வடபுல மண்ணில் காணாமற்போன 600 இளைஞர்களும் இருக்கின்றார்களா, இல்லையா என்பதை எண்ணிக் கலங்கி நின்று உண்ணாவிரதம் இருக்கும் எனதருமைத் தாய்மார்களே! உங்கள் பிரச்சினைக்கு விடை என்ன?

வெறும் பம்மாத்து அரசியல் காட்டாமல் இதன் உண்மைத் தன்மையை அறிந்து உங்களுக்குத் தெளிவுபடுத்துவேன்.

வடபுலத்து தமிழ், முஸ்லிம் மக்கள் நிவாரணங்களில் தங்கியிராமல் சுயமாக உழைத்து தன்னிறைவு பெறக்கூடிய சமாதானச் சூழலை உருவாக்க நேர்மையும் திறனும் கொண்டவர்களாகவே உங்கள் தெரிவு இருக்கட்டும்.



X



(C/19346)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த கந்தசாமி மாலதி என்பவருடைய வி.அ.அ (இல.091033960), தேசிய அ.அ. (இல. 758042413V) என்பன நெல்லியடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள், நெல்லியடி லவ்லி கூல்பாரில் அல்லது செ.சுப்பிரமணியம் (தலைவர், ப.நோ.கூ.சங்கம்), துரையன் தோட்டம், நெல்லியடி, கரவெட்டி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (94641)

சண்முகலிங்கம் ஸ்ரீகரனின் விசேட அ.அ. (இல.0902005728) தவறிவிட்டது. இல.402, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். கண்டெடுத்தவர்கள் ஹப்பி ரெயிலறிங், இல.4, செட்டித் தெரு, நல்லூர் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (94646)

### தேவை

டீசல் லீஸ்டர் இஞ்சின் 7-10KV இடைப்பட்ட டைனமோவுடன் புதிய அல்லது நல்ல நிலையிலுள்ள ஜெனரேட்டர் தேவை. தொடர்பு:- 305, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. (94595)

### மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம், நட்சத்திரம் சதயம் 4ஆம் பாதம், 44 வயது நிரம்பிய ஏக புத்திரிக்கு பொது நிறமும், படித்த, அழகிய, ஆய்ந்தறிதல் அறிவாற்றல் உள்ள, நற்பண்புள்ள மணமகன் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்: விள.இல.1392, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (94619)

### விற்பனைக்கு

NOKIA கையடக்கத் தொலைபேசிக்குரிய புதிய பற்றறிகள் சார்ச்சருடன் விற்பனைக்கு உண்டு. SANYO கையடக்கத் தொலைபேசிக்கு உரிய அதி சக்திவாய்ந்த அன்டனாக்களும் விற்பனைக்கு உண்டு. உங்களது கையடக்கத் தொலைபேசியுடன் மாலை 4 மணிக்குப் பின்னர் நேரில் தொடர்பு கொள்ளவும். எஸ்.தவநாயகம், சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி. 070-212559. (94617)

50 நாள் நிரம்பிய, பூச்சி நீக்கிய நல்லின அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சிவா, "கம்பளை இல்லம்", வட்டக்குளம் அருகில், கட்டப்பிராய்ச் சந்தி. (94632)

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சிவன்பண்ணை வீதியில் உள்ள சகல வசதிகளுடனும் கூடிய மாடிவீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.லோகநாதன், இல.75, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். (C/19358)

### புத்தக இரவல் பணி

தென்மராட்சி,நவ.19

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்க பொது நூல் நிலையத்தில் அங்கத்தவர்களுக்கு புத்தகங்கள் இரவல் கொடுக்கும் பணி கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் பிரசுரமான புத்தகங்களும் இரவல் கொடுக்கும் பகுதியில் இணைக்கப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் தெரிவித்தார். (க-117)

### தேவை

கணனியில் Type Setting, Page Making, Corel Draw செய்வதில் அனுபவம் வாய்ந்தவர்கள் தேவை. உடன் நேரில் வரவும்.

தொடர்பு:
திருவள்ளுவர் அச்சகம்,
393, மருத்திதுறை வீதி, நல்லூர்
(யாழ். மாநகரசபை அருகில்)

## பாராட்டுகிறோம் எங்கள் அதிபரை...!



பச்சிலைப் பள்ளி பதியினில் மிளிர்ந்து
சோரன்பற்றில் அதிபர்தர உயர்வு பெற்றிடும்
கணபதிப்பிள்ளை உதயகுமாரன் அவர்சீர்கள் நிறைந்திட
சிந்தை மகிழ்ந்து வாழ்த்துகிறோம்!

ஆசிரியர்கள்,
கிளி/சோரன்பற்று கணேசா வித்தியாலயம்.
அதிபர், ஆசிரியர்கள்,
யா/கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்,
கரவெட்டி.
(94634)

### தபால் மூலம்/பிரத்தியேக வகுப்புகள் (9-11)

தரம் 9-11 வரை கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் தனிப்பட்ட ரீதியாகவோ, குழுக்களாகவோ, நேரில் வந்தோ அல்லது தபால் மூலமோ அனுபவ ஆசிரியரினால் கற்பிக்கப்படும். சுய விவரங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**விள.இல.1393,**
**மே/பா உதயன்.** (94622)

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது சனசமூக நிலையத்துக்குக் கடந்த 50 வருடங்களாக நிரந்தரக் கட்டடம் இல்லாத நிலையில் கடந்த கால நிதி ஒதுக்கீடுகளில் ஒன்றரை லட்சம் ரூபாவினை ஒதுக்கித் தந்தும், தற்போதும் "நான்" நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாவினை ஒதுக்கீடு செய்து அதில் 50,000/= ரூபாவுக்கான காசோலையை உடனடியாக எமக்குத் தந்துதவிய பெருந்தகைகளான,



மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
உயர்திரு. **கே.வி.குகேந்திரன் (ஜுகன்)**
அவர்களையும்




வலி. தென்மேற்கு
பிரதேச சபைத் தலைவர்
உயர்திரு. **வெ.அ.ஜோன்சன் (ஜீவா)**
அவர்களையும்


நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மானிப்பாய் கிழக்கு. - பாரதி சனசமூக நிலையத்தினர்.
மானிப்பாய். (94647)

# பொதுத் தேர்தல் - 2001 யாழ்.மாவட்டம்
# தமிழர் விடுதலைக் கூட்டணி



**வி.என்.நவரத்தினம்**



**நடராஜா இரவிராஜ்**

☆ சிதைந்து, அழிந்து போயுள்ள தென்மராட்சியை மீண்டும் செழிப்புறச் செய்வோம்.......!
☆ சீரழிந்து போன எம் வாழ்வை வளப்படுத்துவோம்.....!

**அன்பார்ந்த தென்மராட்சி வாழ் மக்களே!**

நாம் வாழ்ந்த பூமி இன்று சிதைந்து, சின்னாபின்னமாகி அழிந்து காட்சியளிக்கின்றது.

எமது பகுதியில் புதையுண்டு இருக்கும் மிதிவெடிகள் அகற்றப்படாமலும், வைத்தியசாலை, சந்தை, பாடசாலைகள், ப.நோ.கூ. சங்கங்கள், பிரதேச செயலர் பணிமனை போன்ற முக்கிய இடங்கள் எல்லாம் திருத்தப்படாமலும் அப்படியே கிடக்கின்றன. எம் மக்கள் அநாதைகள் போல் நிவாரணம் தேடி அங்குமிங்கும் அலைந்து திரிகின்றனர்.

- தென்மராட்சி மக்கள் மீளக் குடியமரமுன் மேற்கூறப்பட்ட அத்தியாவசிய தேவைகள் நிறைவேற்றப்படவேண்டும்.
- வீடுகளை இழந்தவர்களுக்கும் வியாபார நிலையங்களை இழந்தோருக்கும் திட்டமிட்ட முறையிலே கிராமசேவையாளருடாக நஷ்டஈடு வழங்கப்படல்வேண்டும்.
- ஏனைய நிவாரணங்கள் மக்களை நேரிடையாகச் சென்றடைய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

மேற்படி கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். இதற்காக நாம் அயாராது உழைக்கவேண்டும்.
இதற்காகக் குரல் கொடுக்கத் தமிழர் தம் ஒற்றுமை அணியாம் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரிப்போம்.

**தமிழர் விடுதலைக் கூட்டணி**

*உங்கள் விருப்பு வாக்கில் ஒன்றை வெற்றி இலக்கம் 9க்கு அளித்திடுவீர்!*
*"உண்மை, நேர்மை, இலட்சியத்திற்கான அயராத உழைப்பு"*
**மண்ணின் மைந்தனுக்குக் கைகொடுங்கள்.**

**நடராஜா இரவிராஜ்** வேட்பாளர் இலக்கம்: 9

(93915)



# புலிகள் - ஐ.தே.க. உறவு: அரசின் பம்மாத்து நாடகம்!



**நாட்டில் எத்தனையோ பிரச்சினைகள் இருக்கையில் தேர்தல் காலங்களில் அவைகுறித்துப் பேசாது தென்இலங்கை மக்களின் உணர்வுகளைத் தூண்டி அரசியல் லாபம் தேடும் முயற்சிகளில் அரசு அண்மைக்காலங்களில் ஈடுபட்டுவருகிறது. புலிகளுக்கும் ஐ.தே.கட்சிக்கும் ஒப்பந்தம் உண்டு எனவும் அது பற்றிய ஆவணங்கள் தன்னிடம் இருப்பதாகவும் கடந்த பொதுத் தேர்தலின்போது பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்தார். தேர்தலின் பின்னர் அவை போலி ஆவணங்கள் என்பதை அவரே ஏற்றுக்கொண்டார். அரசின் இந்தப் பம்மாத்து நாடகம் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது. "லக்பிம" வார இதழில் எம்.எஸ்.எம். அயுப் எழுதிய கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம பொதுத் தேர்தல் நடைபெற்றது. மீண்டும் இவ்வருடம் டிசெம்பர் 5ஆந் திகதி மற்றுமொரு பொதுத் தேர்தல். இந்த 14 மாதங்களுக்குள் இந்நாட்டு மக்கள் இரு பொதுத் தேர்தல்களைச் சந்திக்கின்றனர்.

225 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்திற்கான தேர்தலில் பல கட்சிகள், பல சுயேச்சைக் குழுக்கள் சார்பில் பெரும் எண்ணிக்கையில் வேட்பாளர்கள் களத்தில் குதித்துள்ளனர். 26 அரசியல் கட்சிகள் களத்தில் உள்ளன. அவற்றின் சார்பில் 3196 வேட்பாளர்கள் சுயேச்சைக் குழுக்கள் 120. அவற்றின் சார்பில் 1414 வேட்பாளர்கள்.

இம்முறை பொதுத்தேர்தல் சற்று மாறுபட்ட சட்டங்களின் பின்னணியிலேயே நடைபெறுகின்றன. அரசியலமைப்பிற்கான 17ஆவது திருத்தம் காரணமாகவே இந்த மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

### தேர்தல் மேடைகளில் புலிகள் பிரசாரம்

தற்போது தேர்தல் பிரசாரங்களும் சூடுபிடிக்கத் தொடங்கி விட்டன. வழமைபோல புலிகளும் தேர்தல் மேடைகளில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளனர். அண்மைக் காலங்களில் அனைத்துத் தேர்தல்களின் போதும் ஒரு கட்சி மீது மற்றக் கட்சி, புலிகளுக்கு ஒத்தாசை வழங்குவதாகக் குற்றஞ்சுமத்திவருகின்றன. இதனாலேயே 'வழக்கம் போல' எனக் குறிப்பிட்டுள்ளோம்.

கடந்த காலங்களில் இத்தகைய குற்றச்சாட்டை ஐ.தே.கட்சியும் பொ.ஐ. முன்னணியும் ஒன்றின் மீது ஒன்று சுமத்தி வந்தன. ஆனால் இம்முறை ஜே.வி.பியும் ஐ.தே.கட்சி மீது புலி 'லேபல்' ஒட்டத் தொடங்கிவிட்டது.

கடந்த மாதம் 31ஆம் திகதி இரவு ரி.என.எல். தொலைக்காட்சிச் செய்தியில் தலைப்புச் செய்தியாக ஜனாதிபதியின் லண்டன் விஜயம் தொடர்பான தகவல்கள் ஒளிபரப்பப்பட்டன. லண்டனில் ஜனாதிபதி பி.பி.ஸி. மற்றும் சி.என்.என்.தொலைக்காட்சி சேவைகளுக்குப் பேட்டியளித்தார். அந்தப் பேட்டிகளில் விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்கு உடன்பட்டால் அந்த அமைப்பு மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவது குறித்துப் பரிசீலிக்க முடியும் என ஜனாதிபதி தெரிவித்தார் என்று குறிப்பிட்டு அந்தத் தகவலுக்கு ரி.என்.என. செய்தியில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு ஒளிபரப்பப்பட்டது.

**தமிழில் : கஜனி**

இதற்கு 5 நிமிடங்களின் பின்னர் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள 'ரூபவாஹினி' கூட்டுத்தாபனம் இரவுச் செய்தியை ஒளிபரப்பியது. அதில் முதல் செயதியாக ஐ.தே.க. ஆட்சியைக் கைப்பற்றினால் விடுதலைப் புலிகள்மீது விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்படுமா, இல்லையா என்பது குறித்து ஐ.தே.கட்சியின் தலைவர் தெளிவுபடுத்த வேண்டும் என அமைச்சர் மங்கள சமரவீர கேட்டுள்ளார் எனக் கூறப்பட்டது.

ரி.என்.எல். ஒளிபரபபு சேவை ஐ.தே.கட்சிக்கு ஆதரவானது. ரூபவாஹினி தொலைக்காட்சிச் சேவை அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது.

மேலே கூறப்பட்ட செய்தியில் ரி.என்.எல் தொலைக்காட்சிச் சேவை ஜனாதிபதி சந்திரிகா புலிகள் மீதான தடையை நீக்கவுள்ளார் என்ற கருத்துப்படத் தெரிவித்துள்ளது. ஆனால் ரூபவாஹினி தொலைக்காட்சி சேவையோ ரணில் ஆட்சிக்கு வந்ததும் புலிகள் மீதான தடையை நீக்கவுள்ளார் என்ற கருத்துப்படத் தகவல் வெளியிட்டுள்ளது.

இவ்வாறான தகவல்களை நாட்டு மக்களுக்கு - குறிப்பாகச் சிங்கள மக்களுக்கு - விடுப்பதன் மூலம் ரி.என்.எல். மற்றும் ரூபவாஹினி தொலைக்காட்சி நிறுவனங்கள் எதை எதிர்பார்க்கின்றன? தேர்தல் வேளையில் தங்கள் எதிர்த்தரப்பினருக்குப் பாதிப்புகளை உருவாக்குவதே அந்த நிறுவனங்களின் நோக்கமாகும். அதைவிடப் புதிதாக - விசேடமாக - அந்தச் செய்திகளில் ஒன்றுமில்லை.

### உணர்வுகளைத் தட்டும் விவகாரம்

இதே ரணில் (அல்லது சந்திரிகா), எதிர்த்தரப்பினர் புலிகள் மீதான தடையை நீக்கவுள்ளனர் என தமிழ் மக்களிடம் சென்று தெரிவித்தால் அதனால எதுவித பயனும் ஏற்படாது. சிலவேளைகளில் இவ்வாறு கூறினால் அங்கு லாபத்தை விட நட்டம் அதிகம் ஏற்படக்கூடும்.

இந்தத் தேர்தல்வேளையில் இவ்வாறான குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதன் மூலம் சிங்கள மக்களிடமிருந்து பயன் கிடைக்கக்கூடும். இது சிங்கள மக்களின் சிங்கள உணர்வுகளைத் தங்கள் அரசியலுக்காகத் தூண்டிவிடும் முயற்சியாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும் பொதுத் தேர்தலின்போதும் ஐ.தே.கட்சி மீது பொ.ஐ.முன்னணி இவ்வாறான குற்றத்தைச் சுமத்தியது ஐ.தே.கட்சிக்கும் விடுதலைப் புலி



களுககும் தொடர்புகள் உண்டு எனக் குற்றஞ்சாட்டியது.

ஐ.தே.கட்சியும் விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளதாகக் கூறிய பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா சில ஆவணங்களை முன்வைத்தார், இருப்பினும் தேர்தல் முடிவடைந்த பின்னர் அவை போலி ஆவணங்கள் என்பதைப் பிரதமரே ஏற்றுக்கொண்டார்.

1999இல் ஜனாதிபதித் தேர்தலின் போது வடக்குக் கிழக்கை இரண்டு வருடங்களுக்கு ரணில் விடுதலைப் புலிகளுக்கு எழுதிக் கொடுக்கவுள்ளார் என்று அரச செய்தியூடகங்கள் பெரும் எடுப்பில் பிரசாரங்களை மேற்கொண்டன.

இருப்பினும் விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளைக்கொண்டு செயற்படுவதற்கு எதிராக ஐ.தே. கட்சி மீது சட்ட நடவடிக்கைகள் எவற்றையும் அரசு எடுக்கவில்லை. அது மாத்திரமன்றி, மேற்குறிப்பிட்ட தேர்தலின் பின்னர் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருந்ததாக ஐ.தே.கட்சி மீது குற்றஞ்சுமத்திய அரசு, அதே ஐ.தே.கட்சியுடன் சில உடன்பாடுகளைக் காண முயற்சித்தது.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர், காயமடைந்த தனது கண்ணைத் துணியினால் மூடிக்கட்டியவாறு உணர்ச்சிமயமாக நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சி மூலம் உரையாற்றிய ஜனாதிபதி, அரசுடன் இணையுமாறு ரணில் விக்கிமைசிங்கவுக்கு அழைப்பு விடுத்தார்.

விடுதலைப் புலிகளுக்கு வடக்குக் கிழக்கைக் கொடுக்கவுள்ளார் எனத் தானே குற்றம் சுமத்திய அதே ரணில் விக்கிரமசிங்காவையே அரசுடன் இணையுமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

கடந்த பொதுத் தேர்தலின் போதும் ஐ.தே.கட்சிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்புகள் இருப்பதாகக் குற்றம் சுமத்திய பொ.ஐ.முன்னணி தேர்தல் முடிவடைந்ததும் அதே ஐ.தே.கட்சியை தங்களுடன் கூட்டு அரசு அமைப்பதற்கு அழைப்பு விடுத்தது.

### இரகசியத் தொடர்பு உண்டா?

ஐ.தே.கட்சிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இரகசியத் தொடர்புகள் உள்ளனவா? இல்லையா? நாமறியோம். இருந்தபோதிலும் இவ் விஷயமாக பொ.ஐ.முன்னணி கூறும் விதம் மற்றும் செயற்படும் விதம் ஆகியனவற்றிற்கிடையே முரண்பாடுகள் உள்ளன என்பது மிகவும் தெளிவாகத் தெரிகிறது.

தற்போது ஜே.வி.பி.யும் புலி - யானை (யு.என்.பி) உறவு குறித்து கருத்துத் தெரிவிக்க ஆரம்பித்துள்ளது. இந்நாட்டிலுள்ள தமிழ்க் கட்சிகள் புலிகளின் தேவைகளுக்கு ஏற்ப செயற்படுகின்றன எனவும் தமிழ்க் கட்சிகளுடன் ஐ.தே.கட்சி இணைந்துள்ளது எனவும், எனவே இதன்படி ஐ.தே.கட்சிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தொடர்புகள் உள்ளன எனவும் ஜே.வி.பி.வாதிக்கிறது. பொ.ஐ.முன்னணியும் சில சந்தர்ப்பங்களில் இவ்வாறே வாதிக்கிறது.இந்த நாட்டிலுள்ள தமிழ்க் கட்சிகள் விடுதலைப் புலிகளின் கருத்துக்களுக்கு ஏற்ப செயற்படுகின்றன எனக் கூறுவதில் உண்மையுள்ளது. இதன்படி தமிழ்க் கட்சிகளுக்கும் ஐ.தே.கட்சிக்கும் இடையே கூட்டமைப்பு இருப்பின் அவ்வாறு வாதிடுவதில் தவறும் இல்லை.

இருப்பினும், தமிழ்க் கட்சிகள் அனைத்தும் விடுதலைப் புலிகளின் கொள்ளைகளை முற்றுமுழுதாக ஏற்று அதன்படி செயற்படவில்லை. இதனாலேயே தமிழ்க் கட்சிகளும் தங்களுக்குப் பாதுகாப்பு வழங்குமாறு அரசிடம் கோருகின்றன.

மறுபுறத்தில், தமிழ் கட்சிகள் புலிகளின் கருத்துகளை ஏற்றுக் கொண்டது இன்று நேற்று அல்ல.

### தமிழ்க் கட்சிகளுடன் பொ.ஐ.மு.உறவு

நிலைமை இவ்வாறு இருக்கை



யில் 1994ஆம் ஆண்டிலிருந்து 6 ஆண்டு காலமாக பொ.ஐ.முன்னணி அரசு தமிழ்க் கட்சிகளின் ஒத்துழைப்புடனேயே ஆட்சி செய்தது. தமிழ் கட்சிகள் தாமாகவே அரசுக்கு ஒத்துழைப்பை வழங்காமல் விட்டனவே தவிர, "நீங்கள் புலிகளுக்கு ஆதரவாளர்கள் எனக் கூறி அரசு அந்தத் தமிழ்க் கட்சிகளை விரட்டியடிக்கவில்லை.

புலிகளுக்கு ஆதரவானவை என்று கூறப்படும் தமிழ்க் கட்சிகள் இன்றும் பொ.ஐ.முன்னணிக்கு ஆதரவை வழங்கத்தயாரெனில் அந்த ஆதரவை பொ.ஐ.முன்னணி ஏற்காமல் விடுமா?

பொ.ஐ.முன்னணியுடன் தகுதிகாண் அரசை அமைப்பதற்கு முன்னர் ஜே.வி.பியினர் கூட ஐ.தே.க. மற்றும் தமிழ்க் கட்சிகள் ஆகியன இணைந்து செயற்பட்ட பொது எதிரணியிலேயே இருந்து செயற்பட்டது. அந்த வேளையிலும் அந்தத் தமிழ்க் கட்சிகள் விடுதலைப் புலிகளின் கருத்தை ஓரளவேனும் ஏற்றுக் கொண்டே இருந்தன.

### ஈ.பி.டி.பி.யின் நிலைப்பாடு

இங்கு தமிழ்க் கட்சிகள் எனக் கூறப்படுபவைவற்றில் பொ.ஐ.முன்னணி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி கட்சி உள்ளடக்கப்படவில்லை. ஈ.பி.டி.பி அமைப்பு விடுதலைப் புலிகளுக்கு எதிரானதா?

ஈ.பி.டி.பி அமைப்பின் யாழ்ப்பாண அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான குகேந்திரன் (ஜெகன்) அண்மையில் திருத்தி அமைக்கப்பட்ட யாழ்பஸ் நிலையத் திறப்பு விழாவில் பேசும்போது, "எமது அமைப்பு விடுதலைப் புலிகளின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தவில்லை; நாங்கள் ஒருபோதும் விடுதலைப்புலிகளைக் காட்டிக் கொடுக்கவுமில்லை" எனத் தெரிவித்துள்ளார்.

இந்த உரையை நிகழ்த்தியவர் தற்போதும் அரசின் அமைச்சர் பதவியை வகிக்கும் ஒருவரைத் தலைவராகக் கொண்ட அமைப்பின் பிரதேசத் தலைவர் ஆவார். இவ்வாறான நிலையில்தான் பொ.ஐ.முன்னணி ஐ.தே.கட்சிக்கு புலி 'லேபல்' ஒட்டுகிறது.

ஐ.தே.கட்சிக்கும் இந்தத் தமிழ்க்

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுத கலாசாரத்திற்கு வித்திட்டவர்கள் இன்று கூட்டமைப்பில் கும்மாளம் போடுகின்றார்கள்

## மானிப்பாய்க் கூட்டத்தில் ஜெகன்

வலி.தென்மேற்கு,நவ.19

ஆயுத கலாசாரத்திற்கு வித்திட்டவர்கள் இன்று கூட்டமைப்பில் சேர்ந்துகொண்டு கும்மாளம் போடுகிறார்கள். அவர்கள் இன்று புலிகளின் பெயரைக் கூறிக்கொண்டு நாடாளுமன்ற ஆசனங்களைப் பிடிக்க வீதி உலா வருகின்றார்கள்.

- இவ்வாறு யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.கே.குகேந்திரன் (ஜெகன்) மானிப்பாயில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தெரிவித்தார்.

மானிப்பாய்ப் பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் தலைமையில் கடந்த சனிக்கிழமை ஈ.பி.டி.பியின் இந்த தேர்தல் பிரசாரக் கூட்டம் பிரதேச சபை ரவீந்திரன் கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது.

அங்கு ஜெகன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

கொலை செய்தவர்களும், கொள்ளையடித்தவர்களும் - மக்களை ஏமாற்றியவர்களும்தான் இன்று கூட்டமைப்பில் சேர்ந்துகொண்டு வாக்குக் கேட்கிறார்கள். மக்களை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்ல வீடு வீடாக வாக்குக் கேட்டுச் செல்கிறார்கள். நாம் மக்கள் முன்னின்று, மக்களின் துன்ப துயரங்களில் பங்கு கொண்டு அவர்களுடன் சேர்ந்து போராடி அபிவிருத்திப் பணியிலும் இன்று ஈடுபட்டு வருகின்றோம்.

புலிகளைக் காட்டிக் கொடுத்தவர்கள், புலிகளின் பெயரைச் சொல்லி தேர்தலுக்கு வருகிறார்கள். ஆனால் புலிகள் எல்லாவற்றையும் அவதானமாகப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

நாம் 8 மாதங்களில் 50 கோடி ரூபாவை மக்களுக்குச் செலவு செய்துள்ளோம். எமது திட்டம் இரண்டு இலக்குகளைக் கொண்டது.

ஒன்று மக்களின் அத்தியாவசியமான தேவைகளும், அபிவிருத்தித் திட்டங்களும் ஆகும். மற்றது அரசியல் நிலைப்பாடு. மக்களின் அத்தியாவசிய தேவைகளைக் கவனிக்காமல் அரசியல் பேசுவது அர்த்தமற்றது.

சுன்னாகம் பிரதேச சபையில் முன்னர் ஈ.பி.டி.பியின் தலைவராக

**தேர்தல் களம்**

இருநதவர் காணி கொள்வனவு என்ற பெயரால் 33 லட்சம் ரூபாவைச் சூறையாடித் தனது பிள்ளைகளுக்குச் சீதனமும், வீடும் வாங்கிக்கொடுத்துள்ளார். அவரை நாம் மக்கள் சேவையில் இருந்து நீக்கி இருந்தோம். தற்போது அவர் அடுத்த சூறையாடலுக்காக ஐ.தே.கட்சியில் வாக்குக் கேட்டு ஓடித்திரிகின்றார் - என்றார்.

ஈ.பி.டி.பி. மானிப்பாய்த் தொகுதி வேட்பாளர் துரைராசா பாஸ்கரன் உரையாற்றுகையில் -

ஈ.பி.டி.பியைச் சேர்ந்த 9 பேரை நீங்கள் நாடாளுமன்றம் அனுப்பினால் 24 மணிநேரமும் யாழ்.மாவட்டத்திற்கு மின்வழங்கக்கூடிய வகையில் மின்திட்டத்தை அடுத்த வருட முற்பகுதியில் அமைத்துத் தருவோம்.

இதைவிட நாம் ஏற்கனவே வழங்கிய உறுதிமொழியின்படி 2003ஆம் ஆண்டில் யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் பொறியியற் பீடம் அமைத்து, மாணவர்களை அனுமதிக்க வழிவகை செய்துள்ளோம் - என்றார்.

மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர் வெ.அ.ஜோன்சன் பேசுகையில் கூறியதாவது:-

தேங்காய்க்கு வரி, மண்ணெண்ணெய்க்கு வரி, கருவாட்டுக்கு வரி என்று மக்களைத் துன்புறுத்தி, வெருட்டியவர்கள் இன்று கூட்டமைப்பில் கூட்டுச் சேர்ந்து மக்களை ஏமாற்றுகிறார்கள்.

எமது தலைவர் டக்ளஸ் தேவானந்தா கருத்துறையில் உண்ணாவிரதிகளைப் பார்வையிடச் சென்றபோது அங்குள்ளவர்களால் பழிவாங்கப்பட்டு ஒரு கண்ணை இழந்துள்ளார்.

அவர் மக்களை விட்டு ஓடவில்லை; ஒதுங்கவில்லை. மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற தொனியில் யாழ்.மண்ணில் சேவை செய்து வருகின்றார்.

ஐ.தே.கட்சியின் முதன்மை வேட்பாளர் வியாபார நோக்கில் ஓடித்திரிகிறார். அவருக்கு அபிவிருத்தி என்றால் என்ன என்பது புரியாது. போராட்டம் என்றால் என்ன என்பது புரியாது. மேலதிக வருமானம் உழைக்க ஒரு கும்பல் அவருடன் சேர்ந்துள்ளது.

கூட்டணியினர் வீடு வீடாக அலைகிறார்கள், மக்கள் பணி செய்தால் வீடுவீடாக அலையத் தேவையில்லை. மக்களே அவர்களுக்குப் பாடம் புகட்டுவர் - என்றார்.

இந்தக் கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவதாசன், நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் புலவர் ஏ.டபிள்யூ.அரியநாயகம், ஈ.பி.டி.பி. வேட்பாளர் கே.பாலநடராஜா (சின்னபாலா) உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.(க-185)

**விற்பனைக்குண்டு**

கொம்பியூட்டர் PENTIUM III டொட்மெட்ரிக் பிறிண்டருடன் புறா வர் விற்பனைக்குண்டு. (94656)

தொடர்பு:- 21, சீனியர் லேன், அரசடி றோட். T.P:2501

# முத்தமிழ் விழா

கோப்பாய் ஆசிரிய கலாசாலை முத்தமிழ் மன்றம் நடத்தும் முத்தமிழ் விழாவும் 'கலைமலர்' வெளியீடும் இன்றும் நாளையும் காலை 9 மணிமுதல் கலாசாலையின் ரதிலஷ்மி மண்டபத்தில் வே.அகிலன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இன்றைய முதல் நாள் விழாவில் யாழ்.பல்கலைக்கழக சமூகவியற்றுறைத் தலைவர் கலாநிதி ந.சண்முகலிங்கன கலந்துகொள்வார். நான்கு நாடகங்கள் விழாவில் மேடையேற்றப்படும்.

நாளைய விழாவில் பிரதம விருந்தினராக கலாநிதி கவிஞர் இ.முருகையன் கலந்துகொள்வார். அன்றைய தினம் 'கலைமலர்' நூல் வெளியிடப்படும். நூலின் ஆய்வுரையை 'அலை' அ.ஜேசுராசா வழங்குவார். (ஐ)


# அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்
## தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு



**நாளை தபால் மூலம் வாக்களிக்கப் போகும், எனது பாசத்திற்குரிய மக்களே!**

**ஒரு நிமிடம் சிந்தியுங்கள்......!**

- எமது மண்ணில் கொழுந்துவிட்டு எரியும் இனப்பிரச்சினைக்கும், தொடரான கோர யுத்தத்திற்கும் முடிவு காணக்கூடிய பெறுமதிமிக்க ஓர் ஆயுதம் இந்தநாளில் உங்கள் கைகளில் தரப்பட்டுள்ளது.
- எமது தேசத்தின் இனப்பிரச்சினைக்குத் தீர்வினைக் காணும் எம்மினத்தின் தீரம்மிக்க இளைஞர்களால் தெரிவுசெய்யப்பட்ட ஆயுத ரீதியிலான போராட்டமானது இலங்கை அரசுகளால் எம்மீது வலிந்து திணிக்கப்பட்டதே என்பதை சர்வதேசத்திற்கும் அடித்துச் சொல்வது இன்று அவசியமாயுள்ளது.
- அரசினது அடிவருடிகளாக மாறி நின்று, அற்ப சலுகைகளுக்காகக் கைகட்டி, வாய்பொத்தி நின்றால் செம்மணி, மிருசுவில், புதைகுழி வரலாறு நாளை உங்களது வளவுக்குள்ளும் வந்து நிற்பது தவிர்க்கமுடியாததாகிவிடும்.
- இந்த மண்ணையும் மக்களையும் நேசித்த காரணத்தால், தமிழ் மக்கள் அனுபவிக்கும் கொடுரங்களை சர்வதேசத்திற்கும் எடுத்துச் சொன்ன காரணத்தால், படுகொலை செய்யப்பட்ட மாமனிதரான எனது தந்தையின் வழியில் தொடர்ந்து உங்களுக்காக, எமது மண்ணிற்காகப் போராட நானும், எனது கட்சியும் எம்மோடு இணைந்த கூட்டமைப்பும் உங்கள் வாக்கினைக் கேட்டு நிற்கின்றோம்.
- தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் அல்லர். தமிழினத்தின் விடுதலைக்காகப் போராடும் தமிழ் மக்களினது ஏகப்பிரதிநிதிகளே என்பதை சர்வதேசத்திற்கும் எடுத்துச் சொல்வோம். அதற்காக உங்களது வாக்கினை உதயசூரியன் சின்னத்திற்கும் விருப்பு வாக்குகளில் ஒன்றை உங்கள் இளைய சகோதரனான எனக்கும் (இலக்கம் 8, மற்றும் இலக்கங்கள் 1, 5) ஆகியவற்றிற்கும் தந்து நிற்குமாறும் பணிவோடு வேண்டி நிற்கின்றேன்.

நன்றி

என்றும் என் தந்தை வழியில் உங்கள் பணியில்

**கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம்**

(92900)



# நெஞ்சகலா நினைவலைகள்

முதலாம் ஆண்டு | 4ஆம் ஆண்டு



**அமரர் கதிர்காமர் நாகரத்தினம்**

(இளைப்பாறிய தபாலதிபர்)

தோற்றம் 30.11.1927 — மறைவு 30.11.2000

திதி:19-11-2001

*கண்ணை இமை காப்பது போல்*
*எம்மையெல்லாம் காத்தீர் அப்பா!*
*காலமெல்லாம் தரணியில் வாழ*
*வழி சமைத்தீரப்பா!*
*வருடம் ஒன்றென்ன ஒருயுகம்தான்*
*சென்றாலும் நீங்காதப்பா உன் நினைவு*
*அவனியில் உமது வாழ்க்கை அழிந்த போதும்*
*உம் நினைவே எம்மனதில் என்றுமப்பா!*



**திருமதி நாகரத்தினம் பூமாதேவி**

தோற்றம் 20.09.1931 — மறைவு 08.12.1997

திதி:24-11-2001

*நிலையில்லா வாழ்வினை*
*நீக்கி நீ சென்று*
*நீண்ட நாள்கள் கழிந்தாலும் - நின்*
*நினைவுகள் எம்முடன்*
*நின்று ஊசலாடுதம்மா உன்*
*துய ரென்னும் சாகரத்தில்*
*துவழ் கின்ற எங்களுக்கு*
*உன் நினைவுகளே ஒளியாகும்.*

எமது அன்புத் தெய்வங்களின் ஆன்ம ஈடேற்றத்துக்காக இன்று (19.11.2001) திங்கட்கிழமை வண் - வடமேற்கு - ஆனைக்கோட்டை ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் ஆலயத்தில் விசேட அபிஷேகமும் அன்னதானமும் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பொன்னையா லேன், ஆனைக்கோட்டை. (94653) பிரிவுகளால் துயருறும்: குடும்பத்தினர்.


# மதுபான நிலையத்துக்குள் புகுந்து 50 ஆயிரம் ரூபா கொள்ளை!

## யாழ்நகரில் கடந்தவாரம் சம்பவம்

யாழ்ப்பாணம்,நவ.19

யாழ்நகரப் பகுதியிலுள்ள மதுபான விற்பனை நிலையம் ஒன்றுக்குள் கத்தி மற்றும் வாள் சகிதம் புகுந்த இரு இளைஞர்கள் கடை உரிமையாளரை அச்சுறுத்திவிட்டு அங்கிருந்து சுமார் 50 ஆயிரம் ரூபா பணத்தை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

கடந்த 13ஆம் திகதி இரவு 8.00 மணியளவில் மழை அங்கி அணிந்துகொண்டு மது அருந்தவந்த இரு இளைஞர்கள் கடையில் மது அருந்திக்கொண்டிருந்தவர்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டு அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்திவிட்டு - இரவு 9.45 மணியளவில் கடை உரிமையாளரையும் அவருடன் நின்றவர்களையும் கத்தி முனையில் அச்சுறுத்திவிட்டு கடையில் இருந்த சுமார் 50 ஆயிரம் ரூபா பணத்தை கொள்ளையடித்துக்கொண்டு மோட்டார் சைக்கிளில் ஏறி தப்பிச் சென்று விட்டனர்.

இது தொடர்பாக யாழ்.பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து இந்தக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்படும் இளைஞர் ஒருவரை யாழ்.பொலீஸார் கைது செய்துள்ளனர்.

மற்றைய இளைஞர் தலைமறைவாகிவிட்டதாகவும் - அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் - யாழ்பொலீஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-6)

# பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நன்மைகருதி இன்ரறகட் கழகத்தின் ஆதரவுடன் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி நடத்தும் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்குத் தொடரில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தமிழ்ப் பாடம் தொடர்பாக கருத்துரை வழங்கப்படவிருக்கிறது.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் ஆசிரியர் சி. சிவலிங்கம் கருத்துரை வழங்குவார். (க-4)

# புலிகள் - ஐ.தே.க....

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகளுக்கும் இடையேயுள்ள தொடர்புகள் யாவை? இரு தரப்பினருக்குமிடையே இரகசிய ஒப்பந்தம் இருப்பதாக ஜே.வி.பி.யும் பொ.ஐ.முன்னணியும் கூறுகின்றன. அவ்வாறான தொடர்புகள் ஏதுமில்லை என த.வி. கூட்டணி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகியன கடந்த முதலாம் திகதி கொழும்புப் பத்திரிகையில் தெரிவித்துள்ளன.

உண்மை நிலை என்ன?

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது தொடர்பாக ஐ.தே.கட்சியும் பொ.ஐ.முன்னணியும் ஒன்றின்மீது ஒன்று குற்றம் சுமத்துகின்றன என இக்கட்டுரையின் ஆரம்பத்தில் தெரிவித்திருந்தோம். தாங்கள் தடையை நீக்குவோம் எனவும் இரு தரப்பினரும் கூறுகின்றனர்.

விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படுமா என இங்கிருந்து அமைச்சர் மங்கள் சமரவீர ஐ.தே. கட்சித் தலைவரிடம் வினா எழுப்பும் வேளையில், விடுதலைப் புலிகள் பேச்சு நடத்த முன்வந்தால் அவர்கள மீதான தடையை நீக்குவது தொடர்பாக ஆலோசிக்கப்படும் என ஜனாதிபதி லண்டனில் இருந்து தொலைக்காட்சிச் சேவைகளுக்குப் பேட்டியளிக்கிறார்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி, அவர்களுடன் பேச்சு மேற்கொள்ளவுள்ளதாக ஐ.தே.கட்சி பல மாதங்களுக்கு முன்னரே தெரிவித்துள்ளது.

தமிழ்க் கட்சிகள் விடுதலைப் புலிகளின் கொள்கைகளை ஏற்று ஓரளவுக்கு செயற்படுகின்றன என்பது உண்மையே. அது மரண பயத்தாலும் இருக்கலாம். அல்லது தமிழ் மக்களால் தாங்கள் புறக்கணிக்கப்படலாம் என்ற அச்சத்தாலும் இருக்கலாம்.

### விடுதலைப் புலிகளின் விருப்பம் என்ன?

விடுதலைப் புலிகள் சிலவேளை ஐ.தே.கட்சியின் வெற்றியை விரும்பக் கூடும். அது ஐ.தே.கட்சியின் திட்டங்கள் விடுதலைப் புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கைத் திட்டத்துடன் ஒத்துள்ளதால் அல்ல. ஆட்சிகள் கவிழும்போது உருவாகும் குழப்பமான நிலையையே புலிகளும விரும்புவார்கள்.

இந்த நிலைமையை 1994இல் அவதானிக்க முடிந்தது. அன்று ஐ.தே.க. ஆட்சி கவிழ்வதைப் புலிகள விரும்பினர். தமிழ்க் கட்சிகளும் பொ.ஐ. முன்னணிக்கு ஒத்துழைப்பை வழங்கின.

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் காலத்திற்குக்காலம் தீர்மானிக்கப்படும்போது அதை எடுத்துக்காட்டி, தென்பகுதி மக்களின் உணர்வுகளுக்காகப் பேசும் தென்பகுதி அரசியல்வாதிகளுக்கு அது வாய்ப்பாய் அமைகிறது. தற்போது நடைபெற்று வருவனவும் அதாவது ஐ.தே.க. மற்றும் விடுதலைப் புலிகள் உறவு பற்றிய பிரசாரமும் அதுவே ஆகும். ☆


# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## வேதநாயகம் பீற்றர் தேவதாஸ்

(பொருளாளர் - யாழ்.மரியாயின் சேனை)

பண்பினால் உயர்ந்த பெருமகனே !
சேவையால் மிளிர்ந்த உத்தமனே !
அன்பிலே சிறந்த சகோதரனே !
உனைப் பிரிந்தே நாம் வாடுகின்றோம்.
விண்ணகம் நாடி நீ சென்றனையோ ?
அன்னைமரி உன்னை வரவேற்றிடுக.
யேசுபிரான் நித்தியசாந்தி அளித்திடுக.
துயருற்ற உன் அன்புள்ளங்கள் அமைதிபெறுக.

*உனது பிரிவினால் கலங்கிநிற்கும் சேனைச் சகோதரர்கள்,*
யாழ்.கொமிற்சியம். (94657)



# மரண அறிவித்தல்

## பெரியதம்பி சங்கரப்பிள்ளை

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் ஊரெழுவை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி சங்கரப்பிள்ளை (முன்னாள் கொழும்பு ஆஸ்பத்திரி வீதி, மகாலக்ஸ்மிஸ் ஸ்டோஸ் உரிமையாளர்) அவர்கள் நேற்று (18.11.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் இராசேஸ்வரியின் அன்புக் கணவரும், ஈஸ்வரமூர்த்தியின் பாசமிகு தந்தையாரும், விஜயலக்ஸ்மியின் அன்பு மாமனாரும், ஆனந்தி, தவக்குமார் (சுவிஸ்), கபினன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2001) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பொக்கணை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ஊரெழு. (94654) ச.ஈஸ்வரமூர்த்தி (மகன்)

# "வெற்றி நிச்சயம்" என்று படையெடுத்து வரலாறு காணாத தோல்வி கண்டனர்!

**விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் துணைவியாரான அடேல் பாலசிங்கத்தின் 'சுதந்திர வேட்கை' என்னும் ஆங்கில நூலின் மொழிபெயர்ப்புத் தொடர் இது.**

இலங்கை இராணுவத்துக்கு "அவமானம்" தேடிக் கொடுக்கவென வந்தது வெற்றி நிச்சயம் என்ற "ஜெயசிக்குறு" இராணுவ நடவடிக்கை.

1997ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி வன்னியில் இலங்கை இராணுவத்தினால் 'ஜெயசிக்குறு' தொடங்



கப்பட்டது.

இந்த இராணுவ நடவடிக்கையை இலங்கை இராணுவம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பெரும் ஆவலுடனும் அக்கறையுடனும் தொடங்கியது.

தெற்காசியாவில் நடந்த போர்களில் நீண்ட நாள்களாக நடந்த போர் இது என்று கருதப்படுகிறது. போர் நான்கு மாதங்களாகத் திட்டமிடப்பட்டது. கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் இழுபறிபட்டு நடந்தது இந்தப் போர்.

இறுதியில் இலங்கை இராணுவ வரலாற்றில் மிகமோசமான படுதோல்வியை இந்த "வெற்றி நிச்சயம்" நடவடிக்கை தேடிக்கொடுத்தது.

"ஜெயசிக்குறு" என்ற இந்த "வெற்றி நிச்சயம்" இராணுவ நடவடிக்கை வன்னியின் மத்தியில் இரண்டு முனைகளைத் திறந்துவிட்டது.

ஒரு முனை 'ஏ-9' என்ற கண்டி - யாழ்ப்பாணம் நெடுஞ்சாலையில் நொச்சிமோட்டை - ஓமந்தைப் பகுதியில் நிறுவப்பட்டது. அடுத்த முனை நெடுங்கேணியில் கென்ற் - டொலர் பண்ணைப் பகுதியில் திறக்கப்பட்டது.

வன்னியின் நடுப்பகுதி ஊடாக வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரையான 80 கிலோ மீற்றர் நெடுஞ்சாலையைக் கைப்பற்றுவதற்காக வகுக்கப்பட்ட வியூகமே இந்த "வெற்றி நிச்சயம்" இராணுவ நடவடிக்கையாகும்.

வன்னியை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து, அங்குள்ள விடுதலைப் புலிகளின் பிரதான முகாம்களைத் திட்டமிட்ட முறையில் அழித்துவிடுவதே இதன் நோக்கமாகும்.

### பிரபாகரன் முகாம்

வன்னியின் மையப்பகுதியில் பிரபாகரனின் முகாம் இருப்பதாக இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கண்டறிந்திருந்தனர். அந்த இடத்தையும் அழித்தொழிப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

நடவடிக்கை ஆரம்பித்து முன்னேறத் தொடங்கியபோது பீரங்கி வண்டிகள், கவச வாகனங்கள் குவிந்தன; போர் விமானங்கள் வானில் வட்டமிட்டன; ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் இரண்டு முக்கிய பகுதிகளிலும் முற்றுகையிட்டனர்.

இப்பொழுது மரபுவழிப் போர்ப் படை என்ற நிலையையும் அடைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலி அணியினர் படை எடுத்து வந்தவர்கள் மீது எதிர் தாக்குதல் நடத்தினர். பெரும் போர் மூண்டது.

நெடுங்கேணியை நோக்கி இராணுவம் முன்னேறத் தொடங்கியதும் பீரங்கிக் குண்டுகள் கற்சிலைமடுப் பகுதியில் வந்து விழத்தொடங்கின. இதனால் நாங்கள் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பிலுள்ள ஒரு வீட்டுக்கு இடம்பெயர வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானோம்.

புதுக்குடியிருப்பில் எங்கள் வீட்டில நாங்கள் இருக்கும் போது இரு பகுதியினருக்கிடையிலும் நடைபெற்ற போரில் பீரங்கிக் குண்டுகள் வந்து வீழ்ந்தன. இதேபோல் விமானப் படைப் போர் விமானங்கள், அகதி முகாம்களை மீதும் பொதுமக்களின் வசிப்பிடங்களை மீதும் கண்மூடித்தனமாகக் குண்டு வீசித் தாக்கின. அப்பாவிகள் உயிர் விடுவதும் அன்றாட நிகழ்ச்சிகளாகி விட்டிருந்தன.

எங்களுக்கு இவை பழக்கப்பட்டு விட்டன. பீரங்கிகளிலிருந்து ஏவப்படும் எறிகணைகள், பீரங்கித் தாக்குதல்கள், எந்தெந்த அளவிலான மோட்டார் குண்டுகள் பயன்படுத்தப்படுகின்றன என்பதும் எமக்கு அத்துப்படியாகிவிட்டன. கவச வாகன பீரங்கித் தாக்குதலகள் எந்த இடத்திலிருந்து நடைபெறுகின்றன என்பதை ஓசையைக் கொண்டே நாங்கள் வீட்டிலிருந்தபடியே கணக்கிட்டுச் சொல்லிக்கொண்டிருந்தோம்.

### நீண்ட காலப் போர்

"வெற்றி நிச்சயம்" இராணுவ நடவடிக்கை நீண்ட காலப் போராக நடக்கும் என்பதை நாங்கள் அறிந்திருந்தோம்.

தனது சக்திக்குட்பட்ட முறையில் வீரர்களைத் திரட்டி சிங்கள இராணுவத்தின் படையெடுப்பை அடக்குவது என்று பிரபாகரன் திட்டவட்டமாக முடிவெடுத்திருந்தார்.

போர்க்களத்திலே உரம்பெற்றிருந்த ஆயிரக்கணக்கான போராளிகள் கேணல் கருணா தலைமையில் மட்டக்களப்பிலிருந்து வன்னிக் களத்துக்கு வரவழைக்கப்பட்டனர்.

நாள்கள், மாதங்களாக போர்ச் சூழல் நீடித்தது. ஆயினும் புதுக்குடியிருப்பு மக்களும் நாங்களும் எங்கள் வாழ்க்கையைப் பெரும்பாலும் சாதாரண நாள்களில் நாம் வாழ்வது போலவே நடத்திச்சென்றோம்.

ஆனால் எங்கள் வீட்டுக்கு வரும் விருந்தினர்கள் சிலவேளைகளில் விமானத்தாக்குதல் சமயங்களில் எங்களுடன் பதுங்கு குழிகளுக்குள் அடிகடி பதுங்கிக்கொள்ளவும் நேர்ந்தது.

தாக்குதல் முடிந்ததும் நாங்கள் பதுங்கு குழிகளிலிருந்து வெளியில் வந்து எங்களுடைய உரையாடல்களைத் தொடர்வோம்.

எங்கே குண்டுகள் வீழ்ந்தன? சேதங்கள் எவ்வளவு? இவை போன்ற செய்திகளை அறியக்காத்திருப்போம்.

### புதிதாக குடியேற்றம்

முல்லைத்தீவில் அதிக மக்கள் வாழும் சிறிய நகரமாக புதுக்குடியிருப்பு விளங்கியது. "புதிதாகக் குடியேறிய பகுதி" என்பது தான் புதுக்குடியிருப்பு என்பதன் அர்த்தமாகும். புதிதாக வந்த எங்களையும் அந்த நகரம் கொண்டிருந்தது.

பாரம்பரியமிக்க கிராமங்கள் பலவற்றினால் சூழப்பெற்ற இந்த நகரில் விவசாயிகள், மீனவர்கள் வெவ்வேறு தொழில் சார்ந்தோர் எனப் பலரும் கலந்திருந்தனர்.

கத்தோலிக்கர்கள், இந்துக்கள் ஆகிய சமயத்தவர்களுடன் நிரந்தர வாசிகளும், இடம்பெயர்ந்தவர்களும் இவர்களில் அடங்கியிருந்தனர்.

இலங்கை இராணுவத்தின் இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்தவர்கள் -

இனக்கலவரம் காரணமாகவும் சிங்களக் குடியேற்றவாசிகளின் செயல்களினாலும் பாதிக்கப்பட்டவர்கள் -

மட்டக்களப்பு, திருகோணமலை, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் ஆகிய பகுதிகளிலிருந்து வந்தவர்கள் -

இவ்வாறு பல பிரிவினர் அவர்களில் அடங்கியிருந்தனர்.

அங்கு குடியேறச் சென்றபோது யாழ்ப்பாணத்திலிருந்து வந்தவர்களையும் அங்கு பார்த்தோம்.

நாயாறுக்கு அப்பால் கொக்கிளாயிலிருந்து வந்த ஒரு பெரிய குடும்பம் எமது அயலவர்களாக இருந்தார்கள். இலங்கை இராணுவத்தின் இராணுவ நடவடிக்கைகளும் அட்டூழியங்களும் இந்தக் குடும்பத்தைப் பெரிதும் வாட்டியெடுத்திருந்தன. வீடு வாசல்களைக் கைவிட்டுப் பாதுகாப்பான இடம் தேடி அவர்களை அவை ஓட வைத்துவிட்டன. அவர்களுக்கு



புதுக்குடியிருப்பில் வசிப்பதற்கு ஒரு துண்டு நிலம் கிடைத்தது.

தங்களது கடின உழைப்பினாலும் விடா முயற்சியினாலும் இந்த நிலத்தில் தங்களது குடும்பத்தவர்களுக்கென மூன்று கூரை வீடுகளை அமைத்துக் கொண்டார்கள். தங்கள் குழந்தைகளுடன் கஷ்ட சீவியம் நடத்தினார்கள்.

ஒட்டி மெலிந்து போன குழந்தைகள் கலகலப்பாக இருப்பார்கள். அடிக்கடி வேலிக்குள்ளால் என்னை நோக்கி 'ஆன்ரி', 'ஆன்ரி' என்று அழைப்பார்கள். தங்களின் உற்சாகமான குரலகளால் மகிழ்ச்சியைத் தருவார்கள்.

### அன்ரி மீது அன்பு

அவர்கள் 'ஆன்ரி' என்று என்னை அழைத்ததும் உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்பேன். ஒரு தடவை அப்படிக் கேட்ட போது உங்களுடைய கோழிகளின் முட்டைகளில் சிலவற்றை தருகிறீர்களா என்று பதில் கிடைத்தது.

**தமிழில் : எம்.ஜீ.**

எங்களுடைய கோழி அடை கிடக்கிறது. நீங்களும் முட்டை தந்தால் அவற்றை அடை வைக்கலாம் என்று குழந்தைகள் சொன்னார்கள். அவர்களுடைய அவசரம் என்னைச் சிந்திக்க வைத்தது.

நான் கொடுக்கப்போகும் முட்டைகளிலேயே தங்கள் வாழ்க்கை தங்கியிருக்கிறது என்பதை அவர்கள் வலியுறுத்துவது போல் இருந்தது.

என்னுடைய பல்வேறு விதமான கோழிகள் அவர்களுடைய வீடுகளுக்குள் புகுந்து கொட்டம் அடித்தன. அதன் மூலம் பிள்ளைகளுக்கு அவை ஆசையை ஏற்படுத்தியிருக்கின்றன. அவர்களுக்கும் அந்தக் கோழிக்குஞ்சுகள் போல் பல்வேறு தினுசுகளில் தேவைப்பட்டிருக்கின்றன.

என்னிடமிருந்த புதிய முட்டைகள் எல்லாவற்றையும் நான் அவர்களிடம் கொடுத்தபோது அவர்கள் திகைத்துப்போய்விட்டனர்.

ஒரு மாதம் கழித்து தங்கள் வீட்டில் பொரித்த கோழிக்குஞ்சுகளின் எண்ணிக்கை பற்றிச் சொல்லிப் பெருமைப்பட்டுக்கொண்டனர்.

கோழி வளர்ப்பு அந்தக் குடும்பத்துக்கு மேலும் வருமானத்தைக் கொடுத்திருக்கிறது. அத்துடன் சத்துள்ள உணவு அருந்தும் வாய்ப்பையும் பெற்றார்கள். (வளரும்)

---

## கொக்குவில் பகுதியில்

# கூ.சங்கக் கிளைக் கடையில் பொருள்களைத் திருட முயற்சி

யாழ்ப்பாணம்,நவ.19

கொக்குவில் பகுதியில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையினை உடைத்து அங்குள்ள பொருள்களைத் திருட முயன்ற திருடர்களின் முயற்சி அப்பகுதி பொதுமக்களால் முறியடிக்கப்பட்டிருக்கின்றது.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றது.

கொக்குவில் கிழக்கு கோணவளை வீதியில் அமைந்துள்ள கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் கடையிலேயே திருடர்கள் பொருள்களைச் சூறையாட முயன்றனர்.

இரவு மழை பெய்து கொண்டு இருந்த சமயம் பார்த்து திருடர்கள் கடைக் கதவினை உடைக்க முற்பட்டபோது அயலவர்கள் விழித்தெழுந்து கூக்குரல் இடவே திருடர்கள் தமது முயற்சியைக் கைவிட்டுத் தப்பிஓடி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-180)

# யாழ்.மாவட்டத்தில் இம்முறை 423 வாக்களிப்பு நிலையங்கள்

## 196 இடங்களில் அமைக்கப்படும்

டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்கு யாழ்.மாவட்டத்தில் 423 வாக்களிப்பு நிலையங்கள் 196 இடங்களில் அமைக்கப்படவுள்ளன.

தென்மராட்சி பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்த மக்களின் நலன்கருதி கைதடியில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும், பாதுகாப்பு காரணமாக தென்மராட்சி கிழக்கு, வெணி ஆகிய இடங்களில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவில்லை எனவும் யாழ்.உதவி தேர்தல் ஆணையாளர் சி.நடராசா தெரிவித்தார்.

வாக்காளர்களின் நன்மைகருதி கடந்தமுறை போன்று இலவச வாகன வசதிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க-117)

## சமய சொற்பொழிவு

கோப்பாய்,நவ.19

நீர்வேலி கந்தசுவாமி கோயில் கந்தசஷ்டி பெருவிழா கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. எதிர்வரும் புதன்கிழமை சூரன்போர் உற்சவம் நடைபெறவுள்ளது.

உற்சவ தினங்களில் தினமும் மாலை வேளையில் "சிவத்தமிழ்" சொல்லழகர் ச.லஷ்சன் சமயச் சொற்பொழிவு ஆற்றிவருகிறார். (க-72)

## 120 மலசலகூடங்களை அமைக்கும் பணி துரிதம்

மூளாய்,நவ.19

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் சுமார் 120 மலசலகூடங்களை அமைத்து பொதுமக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த மலசலகூடங்களை அமைக்கும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனைத்து வேலைகளையும் இம்மாத இறுதிக்குள் பூர்த்தியாக்கும் வகையில் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

மூளாய்க் கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஐம்பது குடும்பங்களுக்கும் வட்டுக்கோட்டை தெற்கில் எழுபது குடும்பங்களுக்கும் புதிய மலசலகூடங்கள் அமைத்து வழங்கப்படவுள்ளன. இவ்வுதவித் திட்டம் 'புனிசெவ்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஏனைய சகல ஏற்பாடுகளையும் வலி.மேற்குப் பிரதேச செயலகம் மேற்கொண்டு வருகிறது. (ஜ-99)

# வாக்காளர் அட்டைகள் இன்று முதல் விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ.19

யாழ்.குடாநாட்டுக்கான வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணி இன்று திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பமாகவுள்ளதாக யாழ்.பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வியாழக்கிழமை யாழ்செயலக தேர்தல் அலுவலகத்தினால் பிரதம தபாலகத்தில் ஒப்படைக்கப்பட்ட வாக்காளர் அட்டைகள் யாவும் தரம் பிரிக்கப்பட்டுச் சகல தபால் நிலையங்களுக்கும் பாதுகாப்புடன் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அவை இன்று முதல் விநியோகிக்கப்படவுள்ளன.

வாக்காளர் அட்டைகளுடன் யாழ.மாவட்டத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் விவரங்கள் அடங்கிய மாதிரிப் படிவங்களும் சேர்த்தே விநியோகிக்கப்படவுள்ளதாகத் தபாலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை -

தென்மராட்சி, பளை ஆகிய பிரதேச வாக்காளர்களுக்கான வாக்காளர் அட்டைகள் அந்தந்த அஞ்சல் அலுவலகங்கள் மூலம் இன்று திங்கட்கிழமை தொடக்கம் வழங்கப்படவுள்ளன. இடம்பெயர்ந்து ஏனைய பிரதேசங்களில் தங்கியுள்ள மக்கள் தத்தமது பிரிவு அஞ்சல் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி, பளை ஆகிய பிரிவு வாக்காளர்களின் அட்டைகள் கரவெட்டியில் இயங்கும் அந்தந்த அஞ்சல் அலுவலகத்திலும் மீசாலை வடக்கு, கொடிகாமம் ஆகிய பகுதி வாக்காளர் அட்டைகள் கொடிகாமம் அஞ்சல் அலுவலகத்திலும் எழுதுமட்டுவாழ், தாளையடி ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த வாக்காளர் அட்டைகள் அந்தந்த உப அஞ்சல் அலுவலகங்களிலும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர்கள் தமது அட்டைகளை நேரில் சென்று பெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10-117-5)

# புதிய சிறைச்சாலைக் கட்டடத்தை கோப்பாயில் அமைக்க உத்தேசம்

யாழ்ப்பாணம்,நவ.19

யாழ்ப்பாணத்தில் சிறைச்சாலை ஒன்றினை கோப்பாய் இராசவீதியில் புதிதாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக யாழ்.சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் சிறைச்சாலையில் இடநெருக்கடி உள்ளது.

பாதுகாப்பு நிலைமைகளும் போதுமானதாக இல்லை. இந்தக் காரணங்களுக்காகவே சிறைச்சாலையை யாழ நகருக்கு வெளியே புதிய இடத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் இராசவீதியில் முன்னர் திறந்த வெளிச் சிறைச்சாலை இயங்கிய காணியில் புதிய சிறைச்சாலைக் கட்டடம் ஒன்றை நிறுவ உத்தேசிக்கப்பட்டிருப்பதாகச் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## அச்சுவேலி தெற்கில் சனியன்று தேடுதல்

அச்சுவேலி,நவ.19

அச்சுவேலி தெற்குப்பகுதியில் சனிக்கிழமை காலை இராணுவத்தினர் வீடுவீடாகச் சென்று குடும்பப் பதிவு மற்றும் வீட்டில் தங்கியிருப்போர் பற்றி விசாரணை மேற்கொண்டனர். (க-11)

# பொதுத் தேர்தல் - 2001

# தீவகத்தை மீட்போம்!

# அடிமைத் தளை அறுப்போம்!!



*சபாநாயகர் அவர்களே!*

நடந்து முடிந்த பொதுத் தேர்தலைப் பற்றி நான் பேச விரும்பு கின்றேன்.

நான் கூறுவது நாடாளுமன்றில் இருக்கும் பலருக்கு அதிர்ச்சியைத் தரக்கூடும். இங்கு கொழும்பில் 'ஸ்லேவ் ஐலண்ட்' (Slave Island) என்று ஓர் இடம் உள்ளது. 'அடிமைத் தீவு' என்று அதற்குப் பெயர். எத்தனையோ வருடங்களுக்கு முன்னர் அது அடிமைத் தீவாக இருந்தது.

ஆனால் இன்னும் இன்றும் ஓர் அடிமைத் தீவு யாழ்ப்பாணத்தில் இருக்கின்றது. அந்தத் தீவுக்கு சபாநாயகரான உங்களால்கூட விஜ யம் செய்யமுடியாது. அந்தத் தீவிலே வாழ்கின்ற மக்கள் அடிமை களாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலே பல்லாயிரக்கணக்கான வாக்குகள் அங்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு அளிக்கப்பட்டபடியால், அப்படி வாக்களித்தவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்டோர் தாக்கப்பட்டிருக்கின்றார்கள்; துன்புறுத்தப்பட்டிருக்கின்றார்கள்.

நான் 'அடிமைத் தீவு' என்று குறிப்பிடுவது நெடுந்தீவைத்தான். அங்குள்ள மக்கள் பாவம்; அப்பாவிகள்; அடக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இந்தத் தீவு மட்டுமல்ல; அங்குள்ள ஏனைய தீவுகளையும் அடக்கியதுதான் ஊர்காவற் றுறைத் தொகுதி. அந்தத் தொகுதியிலே 51 ஆயிரம் வாக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்த 51ஆயிரம் வாக்குகளும் குறித்த ஓர் அரசியல் கட்சியின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ளது. அங்கு அந்தக் கட்சியினர் தவிர்ந்த வேறு யாரும் தேர்தல் பிரசாரம் செய்யமுடியாது. இன்று, நேற்றல்ல; பல ஆண்டுகளாக இதே நிலைமைதான்.

எத்தனையோ தேர்தல் குளறுபடிகள், கெடுபிடிகளுக்கு மத்தியில்தான் அங்கு தேர்தல் நடைபெற்றிருக்கின்றது.

எனவே இந்தத் தேர்தலை ஒரு ஜனநாயக முறைப்படி நடைபெற்ற தேர்தல் என்று நான் கூறமாட்டேன்; ஒப்புக்கொள்ளவும் மாட்டேன்.

நாங்கள் எல்லோரும் உண்மையாகவே ஜனநாயக நடைமுறைகளுக்குக் கட்டுப்பட்ட வர்களாக இருப்போமாயின், ஏகமனதாக ஒரு முடிவு எடுத்து விரைவில் ஒரு நியாயமான பொதுத் தேர்தலை நடத்துவோம். அதுவே இந்த நாட்டில் ஜனநாயகத்திற்கு நாங்கள் செய் யக்கூடிய ஒரு பெருங் கைங்கரியமாகும்.

தேர்தல் சம்பந்தமாக நடைபெற்ற குளறுபடிகள் குறித்து நாடாளுமன்றத்தில் விசேட விவாதம் ஒன்றை நடத்தினால் முழு இரகசியங்களும் - நடந்த சம்பவங்கள் அனைத்தும் - அம்பலத்துக்கு வர வாய்ப்புக் கிட்டும்.

- கடந்த நாடாளுமன்றம் கூடிய கையோடு 2000, ஒக்ரோபர் 18ஆம் திகதி வீ. ஆனந்தசங்கரி ஆற்றிய உரை.

நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர்

## வீ.ஆனந்தசங்கரியை

ஆதரிப்போம்

## தமிழர் விடுதலைக் கூட்டணி

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

(C/19357)

# ஜனநாயக கருத்துச் சுதந்திரத்தை தவறாகப் பயன்படுத்த வேண்டாம்!

## பல்கலை மாணவருக்கு ஈ.பி.டி.பி. பதில்

யாழ்ப்பாணம்,நவ.19

ஜனநாயக அரசியல் சூழல் தருகின்ற கருத்துச் சுதந்திரத்தை தவறான முறையில் பயன்படுத்திட விவேகமுடைய பல்கலைக்கழக மாணவர்கள் முற்படக்கூடாது.

ஈ.பி.டி.பி அமைப்பு நேற்று விடுத்த ஓர் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கையின் முழுவிவரம் வருமாறு:-

கடந்த காலங்களைப்போல் அல்லாமல் தேர்தல்களையும், ஜனநாயக அரசியல் சூழல்களையும், மக்களின் வாக்குப் பலத்தையும் பயன்படுத்திக் கொள்ள பல்வேறு சக்திகளும் முன்வந்திருப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம். 1994 முதல் நாடாளுமன்ற அரசியல் செயற்பாடுகளின் மூலமாக எமது மக்களின் அன்றாடத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியது முதல் அரசியல் உரிமைகளுக்காக உறுதியாகக் குரல் கொடுத்தது வரையிலான நிகழ்ச்சிகள் மக்கள் மததியில் வளர்த்திருக்கும் நம்பிக்கையைப் புறக்கணித்திதுவிட முடியாத சூழலிலேயே இன்று தேர்தலைப் பயன்படுத்தும் எண்ணம் பலருக்கும் தலைதூக்கியுள்ளது.

எனினும் மக்கள் மத்தியில் வளர்ந்துள்ள நம்பிக்கையைக் கண்டு மிரண்டு போயிருப்பவர்கள் 'அந்நிய இராணுவம் மண்ணை ஆக்கிரமித்து நிற்கின்றது' என்பது போன்ற பகையை, வெறுப்புணர்வை ஆக்கி வருகின்றனர்.

மேலும் மண் மீட்பா? மக்களின் வாழ்வா? எது முக்கியம் என்ற கேள்வி மேலோங்கியுள்ள இன்றைய அரசியற் சூழ்நிலையில் யுத்தத்தின் மூலம் மண் மீட்கப்படுவதாக இல்லை எனபதைப் பலரும் நன்கு உணர்ந்துளளனர். மக்கள் அன்றாட வாழ்க்கையில் முகங்கொடுக்கும் அவலங்களை நீக்கி அடிப்படைப் பிரச்சினைகளுக்காகப் பாடுடவும், வாதாடவும் கூடியவர்கள் நாளாந்தம் தமக்கு அருகில் வாழ்பவர்களே என்பதையும் நன்கு புரிந்துள்ளனர். தேர்தல்கள் என்பது அவ்வப்போது வந்து போகும் திருவிழாக்கள் அல்ல என்றும் - வாக்களிப்பு என்பது சில்லறை வியாபாரம் அல்ல என்றும் - மக்கள் தெரிந்து கொண்டுள்ளனர்.

இதனாலேயே அடிப்படைப் பிரச்சினைகளை விடவும் அன்றாட அவலங்கள் நீங்க வேண்டும் என்பதில் அக்கறையாக உள்ளனர். வன்னிக்கான பொருளாதாரத் தடை நீக்கப்பட வேண்டுமென்பதை விட குடாநாட்டிற்கான தரைவழிப் போக்குவரத்து முக்கியம் என்கின்றனர். மரபுவழித் தாயகத்தை பாதுகாப்பது என்பதைவிட தத்தம் சொந்த இடங்களில் மீளக் குடியேற்றம் என்பதற்காக ஏங்குகின்றனர். புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும் என்பதைவிட சகோதரப் படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும் என்பதில் அக்கறை கொண்டுள்ளனர்.

மக்கள் தமது இந்த எண்ணங்களைப் பிரதிபலிக்கக் கூடியவர்களே நாடாளுமன்றம் செல்ல வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். இதனை உணர்ந்துகொண்ட பல்கலைக்கழக மாணவர்களான சிலர், வீணான குழப்பங்களையும், தவறான கருத்துப் பரம்பலையும் ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகத் தெரிய வருகிறது. மாணவர்கள் குறுகிய சுயநலவாத கடசியரசியலின் பகடைக் காய்களாகத் தாங்கள் பயன்படுத்தப் படுவதற்கு கல்வியில் அக்கறை கொண்ட பெரும்பாலானவர்கள் இணங்கிப் போகமாட்டார்கள் என்பதே எமது நம்பிக்கை. ஜனநாயக அரசியற் சூழல் தருகின்ற கருத்துச் சுதந்திரத்தைத் தவறான முறையில் பயன்படுத்திட விவேகமுடைய பல்கலைக்கழக மாணவர்கள் முற்படல் ஆகாது என்பதை வலியுறுத்திக் கூறவிரும்புகின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## அச்சுவேலியில் கிரனேட் வீச்சு

அச்சுவேலி,நவ.19

அச்சுவேலி பொதுச் சந்தைக்கு அருகில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7.00 மணியளவில் கிரனேட் வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது. இதனால் அங்கு பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது.

பொதுச் சந்தைக்குத் தெற்குப் புறமாக உள்ள வர்த்தக நிலையங்கள் இதனால் சேதமடைந்தன. (ஐ-11)

### போரை நிறுத்துமாறு இரு தரப்பையும் கோரி

# இங்கு கையொப்பங்கள் சேகரிக்க தென்னிலங்கைப் பெண்கள் வருவர்

யாழ்ப்பாணம்,நவ.19

நாட்டில் நடைபெற்றுவரும் யுத்தத்தை உடனடியாக நிறுத்துமாறு வலியுறுத்தி யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரண்டு தரப்பினருக்கும் சுமார் ஒரு லட்சம் கையொப்பங்களை நாடளாவிய ரீதியில் சேகரித்து அனுப்பும் நோக்கத்துடன் -

தென்பகுதியில் இருந்து யுத்தத்தால் கணவன்மாரை இழந்த பெண்களின் அமைப்பைச் சேர்ந்த 6 சிங்களப் பெண்கள் நாளை மறுதினம் புதனகிழமை குடாநாட்டுக்கு வருகின்றனர்.

இங்கு இவர்கள் யுத்தத்தால் கணவன்மாரை இழந்த பெண்களைச் சந்திப்பதற்கும் கையொப்பங்களைச் சேகரிப்பதற்கும் 'கியூடெக்' நிறுவனம் ஆதரவு வழங்க உள்ளது.

இவர்கள் எதிர்வரும் 24ஆம் திகதி வரை குடாநாட்டில் தங்கியிருப்பர் என்றும் 'கியூடெக்' நிறுவன இயக் குநர் அருட்தந்தை சி.ஜெயக்குமார் தெரிவித்தார்.

இதேவேளை -

யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் ஸ்ரீலங்கா அரசையும் விடுதலைப் புலிகளையும் உடனடியாக யுத்த நிறுத்தம் செய்யுமாறு வலியுறுத்திக் கேட்பதற்காக தென்பகுதியில் இவர்கள் ஏற்கனவே ஆயிரக்கணக்கான கையொப்பங்களைச் சேகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

# இளைஞர்கள் வாய்த்தர்க்கம்; அதன் விளைவாய் வாள்வெட்டு!

## சுழிபுரத்தில் மூவர் காயம்

சுழிபுரம் - பறளாய் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் இரு குழுக்களுக்கு இடையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற அடிதடியில் வாள் வெட்டுக்கு இலக்காகி 3 இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த துரைராஜசிங்கம் வைத்தியநாதன் (வயது - 22), சீனிவாசகம் சிறி அச்சுதானந்தன (வயது 17), சிவசுப்பிரமணியம் ஜெயக்குமார் (வயது - 28) ஆகிய மூன்று இளைஞர்களுமே வாள் வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

போதையில் வந்ததாகக் கூறப்படும் இளைஞர் குழு ஒன்று ஆலயக் குளத்தில் குளித்தபோது அதனைத் தடுக்கச்சென்ற இளைஞர்களுக்கும் அவர்களுக்கு மிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கமே பின்னர் கைகலப்பாக மாறியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-6)

### ஜெயக்குமாரின் படுகொலையை அடுத்து

# மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் பிரசாரம் மந்தம்!

மட்டக்களப்பு மாவட்ட ஐ.தே.க. வேட்பாளர் தம்பிராஜா ஜெயக்குமாரின் படுகொலையை அடுத்து அந்த மாவட்ட வேட்பாளர்களின் பாதுகாப்புக் குறித்து கேள்வி எழுந்துள்ளது. வேடபாளர்களின் மீதான தொடர்சசியான அச்சுறுத்தல்களினாலும், நெருக்குதல்களினாலும் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவது பாது காப்பற்றதாகிவிட்டது.

காத்தான்குடியில் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் அப்துல் மர்சூக் மீதான துப்பாக்கிச் சூடு, மட்டக்களப்பில் ஐ.தே.க. வேட்பாளர் சசிதரன் மீதான தாக்குதல், ஓட்டமாவடியில் வேட்பாளர் முகமட்தம்பி மீதான தாக்குதல் ஆகியவற்றை அடுத்து ஜெயக்குமாரின் படுகொலை மிகுந்த பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளத். இத் தாக்குதல்களால் பிரசார பணிகளில மந்தநிலை ஏற்பட்டுள்ளது.

பட்டிருப்புத் தொகுதியில் முற்றாக துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது. நகரெங்கும் கறுப்பு, வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. அங்கு கடும் மழை பெய்கிறது. கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் காலஞ்சென்ற ஜெயக்குமாரின் எருவில் வீட்டுக்கு மக்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்துகின்றனர்.

இதேவேளை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பினால் கிரானில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிரசாரக் கூட்டம் ஆரவாரங்களின்றி நடைபெற்றது. (உ)

## சாரணர் தலைவர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.19

யாழ்.மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் ஆதரவில் சாரணத் தலைவர்களுக்கான கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ,2.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறும். (ஐ)

# முதலாவது ஆண்டு நெஞ்சகலாத நினைவலைகள்

தோற்றம் 1942 08 03



மறைவு 2000 11 30

# அமரர் இராசு செல்வரத்தினம்

*(அம்பாள் மரக்காலை, உரிமையாளர்)*

அன்புக்கும் பண்புக்கும் உறைவிடமாய், அறத்தின் காவலனாய், அன்புப் பெட்டகமாய், அரவணைக்கும் தூயவனாய், என்றும் தயாளனாய் பாருக்குள் பதுமையின் சின்னமாய், பாவிகள் நெஞ்சில் பவள மணியாய், பாசமிகு தந்தையாய், பண்பாகிய குணமும் கனிவாகிய பேச்சும் மலர்வான முகமும் நிறைவாகிய உணர்வும் தளராத சிந்தையோடு நித்தமும் அயராது உழைத்து அன்பாகிய அரவணைப்பிலே எம்மையெல்லாம் பாசமாகிய வலையில் இறுகப் பிணைத்தீரே! அதன் உருக்கத்தை உருவகித்துக் காட்டினீரே!

எம்மை விட்டு நீங்கி ஆண்டொன்று ஆனதுவோ?
நூறாயிரமாண்டாயினும் ஆறாதே உங்கள் பிரிவு!
நித்தமும் நின் திருவதனத்தைக் காணத் தவிக்கின்றோம்!
என்றும் உங்கள் நினைவுகளோடு நாம்!

**தீர்த்த யாத்திரைக்குத் திருக்குற்றாலமும் சேதுக்கடலும் ஏனோ?**
**ஆருயிர்த் தந்தை அருகில் இருந்தால் வேறோர் சொர்க்கமும் ஏனோ?**

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*பிரிவால் துயருறும்:*
மனைவி : திருமதி செ.மங்கையர்க்கரசி,
பிள்ளைகள்: செ.றஜனிகாந், செ.றஜனிதரன், செ.தர்சினி.

*இல.50, 5ஆம் ஒழுங்கை,*
*அரசடி வீதி,*
*நல்லூர்.*
(94598)

ராஜா யாழ்ப்பாணம்
கமல், மனீஷா, ரவீனா ராண்டன்
மற்றும் பலர் நடித்த
ஆளவந்தான்
தினசரி:- 10.00, 2, 5 (பு.நே)
சனி, ஞாயிறு 10.00, 2, 5 (பு.நே)
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தினத்தில் மாபெரும் வெளியீடு.
ஆசனங்களை முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்.
(C/19317)

நாகம்ஸ் சுன்னாகம்
ஷியாம், ஜோதிகா, சிம்ரன் நடித்த
12-B
வாழ்க்கையில் எதிர்பாராத திருப்பங்கள்
காட்சி நேரம் மாற்றம்
காட்சிகள்:- 11.00, 3.00,6.30 (பு.நே)

நிறஞ்சனாஸ் சங்கானை
குணால், மோனல், கரண் நடித்த
பார்வை ஒன்றே போதுமே
(ரீலஸ்)
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.)

# மரண அறிவித்தல்

## பூபாலசிங்கம் பிரபாலன்

நாகபூஷனி அம்மன் வீதி, கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த பூபாலசிங்கம் பிரபாலன் (பிரபா) 17.11.2001 சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் பூபாலசிங்கம் - நகுலேஸ்வரி தம்பதிகளின் மூத்த புதல்வனும் மதுரிகா, கிருஸ்ணபாலன் ஆகியோரின் சகோதரனும் பகீரதனின் (கனடா) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

*நாகபூஷனி அம்மன் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு*
(94659)

தகவல்:
கமலநாதன் (மாமா)

# ஆப்கான் நிலைமைகளை அடுத்துப் புலிகள் யாழ்நகர் மீதான தாக்குதலைக் கைவிட்டனராம்!

## 'ஐலண்ட்' பத்திரிகையில் இப்படிச் செய்தி

கொழும்பு,நவ.19

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலை அமெரிக்க ஆதரவு பெற்ற வடக்குக் கூட்டணிப் படைகள் கைப்பற்றியதைத் தொடர்ந்து யாழ்.நகரின் மீது நடத்தத் திட்டமிட்டிருந்த பெரும் தாக்குதலைக் கைவிடுமாறு விடுதலைப் புலிகளின் தலைமை அதன் போராளிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறது.

வன்னித் தகவல்களை ஆதாரம் காட்டி 'சண்டே ஐலண்ட்' பத்திரிகை இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறது.

யாழ்நகரைக் கைப்பற்றும் முயற்சியாக அந்த நகரை நெருங்கும் சமயத்தில் அயல்நாடுகளில் தரித்து நிற்கின்ற அமெரிக்க யுத்த விமானங்களின் உதவியை அரசு நாடக்கூடிய சாத்தியக் கூறுகளை கவனத்தில் எடுக்க வேண்டியிருப்பதாக புலிகளுக்கு நெருங்கிய வட்டாரங்கள் கூறியதாக 'ஐலண்ட்' தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதகாலத்துக்கு முன்னர் தங்கள் கப்பல்கள் மூலம்பெருமளவு யுத்தத் தளபாடங்களைப் புலிகள் வன்னிக்குக் கடத்தி வந்திருந்தனர். அவற்றில் பெரும்பாலானவை தாங்கி எதிர்ப்பு ஆயுதங்களும், விமான எதிர்ப்பு ஆயுதங்களும் ஆகும். பூநகரியில் இருந்து ஒரு சில மைல்கள் தொலைவில் உள்ள யாழ்நகரைக் கைப்பற்றும் நோக்கில் புலிகள் இந்த ஆயுதங்களைத் தயார் செய்திருந்தனர். தேர்தல் தினத்துக்கு முன்பாக தாக்குதலைத் தொடுத்து, படையினருக்குத் தோல்வியை ஏற்படுத்துவதும் சந்திரிகா குமாரதுங்கவின் அரசுக்குச் சங்கடத்தை ஏற்படுத்துவதுமே புலிகளின் நோக்கமாக இருந்தது. ஆனால் ஆப்கானிஸ்தான் போரின் வெற்றியை அமெரிக்காவும் பிரிட்டனும் கொண்டாடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், யாழ்நகர் மீதான தாக்குதல் உலகின் கவனத்தை ஈர்த்துவிடும் என்று ஐரோப்பாவில் உள்ள புலிகளின் தலைவர்கள் எச்சரிக்கை செய்ததை அடுத்து யாழ நகர் மீதான தாக்குதல் திட்டத்தை புலிகள் தலைமை கைவிட்டு விட்டது - என்றும் 'ஐலண்ட்' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# யாழ். மக்களின் பிரச்சினைகள்; நாளை மகஜர்கள் கையளிப்பு

## ஐக்கிய சோஷலிசக் கட்சி ஏற்பாடு

யாழ்ப்பாணம்,நவ.19

யாழ்.மாவட்ட மக்களின் பிரச்சினைகள் தொடர்பான விவரங்கள் அடங்கிய மகஜர்களை ஐக்கிய சோஷலிசக் கட்சியினர் நாளை அமைச்சுச் செயலகங்களில் கையளிக்கவுள்ளனர்.

இது தொடர்பாக அக் கட்சியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர் க.தேவதாசன் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்ப்பாண மாவட்ட மக்களின் இன்றைய வாழ்க்கை நிலைமையை, குறிப்பாக தொழிலாளர், விவசாயிகள், மீனவர், வர்த்தகர், தாழ்த்தப்பட்டோர், இடம்பெயர்ந்தோர், காணமற்போனோர், சமுர்த்தி ஊழியர், கிராம சேவை அலுவலர் மற்றும் ஊடகவியலாளர் ஆகியோர் முகங்கொடுக்கும் முக்கிய விடயங்கள் மற்றும் அவர்களின் அவசியத் தேவைகள் அடங்கிய தனித்தனி மகஜர்களை யாழ்.மாவட்ட ஐக்கிய சோஷலிசக் கட்சியின் முதன்மை வேட்பாளர் க.தேவதாசன் தலைமையில் அக்கட்சியின் சிங்கள, தமிழ் பிரமுகர்கள் இணைந்து சம்பந்தப்பட்ட ஒவ்வொரு அமைச்சுச் செயலகத்திடமும் 20.11.2001 செவ்வாய்க்கிழமை நேரில் சென்று கையளிக்கவுள்ளனர். இம் மகஜர்களின் பிரதிகள் அன்றைய தினமே வெளிநாட்டுத் தூதுவர்களிடமும் கையளிக்கப்படவுள்ளன.

நாட்டின் ஏனைய பிரதேசங்களுடனான தரைவழித்தொடர்பு துண்டிக்கப்பட்டு, கொடிய யுத்தத்தின்கோரப் பிடியில் சிக்கித்தவிக்கும் யாழ்ப்பாண மக்களின் அவசியத் தேவைகளை அலட்சியப்படுத்தி, வாக்களிகும இயந்திரங்களாக மட்டும் அம்மக்களைப் பாவிக்க முனைவதைத் தவிர்த்து அனைத்து அரசியற் கட்சிகளும் கட்சி நலன்களுக்கப்பால் மக்கள் நலனில் அதிக அக்கறை கொள்ள முன்வரவேண்டும். யுத்தத்தைக் காரணங்காட்டி மக்களின் அவசியத் தேவைகளை நிறைவேற்றத்தவறும் அரசுக்கெதிராக அனைத்து வெகுஜன அமைப்புக்களும் ஒன்றிணைந்து போராடுவதைத் தவிர மக்களுக்கு வேறுவழி கிடையாது.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தொடர்ந்து பெய்யும் மழையால் தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம்

வலி.வடக்கு,நவ.19

யாழ்ப்பாணத்தில் பெய்துவரும் மழையைத் தொடர்ந்து, குளங்களில் நீர் நிறைந்து காணப்படுவதுடன் அயல்ப்பகுதிகளிலும் வெள்ள அபாயம் எதிர்நோக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் மழை நாள்களில் நீர் ஓடும் வெள்ள வாய்க் காலகள் துப்புரவு செய்யப்படவில்லை. சில வாய்க்கால்களின் குறுக்கே மண் போட்டு உயர்த்தி வீதிகளாகப் பயன்படுத்தப்பட்டுவருகின்றன.

தற்போது பெய்யும் மழை காரணமாக நாயன்மார்கட்டு, திருநெல்வேலி, சிவன்குளம், பண்டாரக்குளம், கொக்குவில் குளக்கரைப்பகுதி மற்றும் தலையாளி போன்ற இடங்கள் வெள்ள அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன.

தொடர்ந்து கடும் மழை பெய்யும் காலங்களில் இப்பகுதி மக்கள் முன்னரும் இடம்பெயர்வுக்குள்ளாகி வந்துள்ளனர். இம்முறை சீரான முறையில் வெள்ளவாய்க்கால்கள் துப்புரவு செய்யப்படாமையினால் மழை நீர் ஓடமுடியாது தேங்கி, வெள்ள நிலைமை உருவாகும் சாத்தியம் உள்ளது. (ஐ-86)


இன்று மாலை 6.30 மணிக்கு

திருமறைக் கலாமன்ற அரங்கில்

கலைப்பாலம் - 2001

☆ நிறைவு நாள் சிறப்பு நிகழ்ச்சிகள் ☆

- தென்னிலங்கை கலைஞர் கௌரவிப்பு
- நடன நிகழ்வுகள்
- யாழ்.- தென்னிலங்கை திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் இணைந்து வழங்கும்

DARSHANA

(தரிசனம்)

(வார்த்தைகளற்ற நாடகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரவேசம் : இலவசம்

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2393. (C/19362) - திருமறைக்கலாமன்றம்.


## கிளைமோரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் சிக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொலைவில் இருந்து இயக்கக்கூடிய இரண்டு நவீன கிளைமோர் கண்ணிகளுடன் வெடிகுண்டுகளையும் சேர்த்துப் புலிகள் அங்கு புதைத்து வைத்திருந்ததாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

படுகாயமடைந்த இரண்டு இளம் பிக்குகளில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் இருவருக்கும் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் தீவிரசிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. காயமடைந்த ஜீப் வண்டியின் சாரதி கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

தாக்குதலை அடுத்து அந்தப் பகுதிக்கு விரைந்த படையினரும் பொலஸாரும் அங்கு பெரும் தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர். எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை. இச்சம்பவத்தை அடுத்து அநுராதபுரம் பகுதியில் பதற்றம் நிலவுகிறது.

இதேபோன்றதொரு தாக்குதல் சம்பவம் கடந்த மாதம் 12 ஆம் திகதி இப்பகுதியில் இடம்பெற்றது. அதில் பதவியாவைச் சேர்ந்த நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் இருவர் கொல்லப்பட்டனர்.

**விசாரணைக்கு உத்தரவு**

இதேவேளை -

இச்சம்பவம் தொடர்பாகப் பூரண விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி பொலீஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்தத் தாக்குதல் தேர்தல் வன்முறைகளோடு தொடர்புபட்டது அல்ல என்று அநுராதபுரம் பிரதிப் பொலீஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். இராணுவத்துக்கு வைக்கப்பட்ட கிளைமோர் தவறுதலாக தேரின் வாகனம் சென்ற போது வெடித்திருக்கலாம் என்றும் பொலீஸார் சந்தேகிக்கின்றனர். எவ்வாறாயினும் விசாரணைகள் தொடர்கின்றன. இதேவேளை, தாக்குதல் தொடர்பாக பாதுகாப்பு அதிகாரிகளிடம் விளக்கம் கோரிய ஜனாதிபதி, அதன் பின்னரே பூரண விசாரணை நடத்துமாறு பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். அதேவேளை மரணச் சடங்கிற்கான ஏற்பாடுகளைக் கவனிக்குமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

தம்மலோக தேரர் கொல்லப்பட்டமை தொடர்பாக தனது அனுதாபத்தையும் கண்டனத்தையும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ஐ-9)

# தமிழரின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்த தேர்தல் ஒரு வாய்ப்பு

## ஜோசப் பரராஜசிங்கம் கூறுகிறார்

எமது சுயநிர்ணய உரிமையை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்பதை வலியுறுத்த இந்தத் தேர்தலை மக்கள் பயன்படுத்த வேண்டும்.

தமிழ்த் தேசிய ஒற்றுமை முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளர் ஜோசப் பரராஜசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

பட்டிருப்பு குருமண்வெளி பொது நூலக முன்றிலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கருத்தரங்கில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் அமைப்பை சில மேற்கு நாடுகள் தடைசெய்து வருகின்றன. இனத்தின் விடுதலைக்காக, சாத்வீக வழியில் போராடிய சமூகங்கள் ஆயுத வன்முறை மூலம் அடக்கப்பட்டன. அதன் எதிரொலியாக அந்த இனங்கள் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தன. தற்போது நியாயபூர்வமான போராட்டங்களுக்கும் பயங்கரவாத சாயம் பூசுவதற்கு சர்வதேச மட்டத்தில் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமையை சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்த இந்தத் தேர்தலைப் பயன்படுத்தவேண்டும் - என்று அவர் தெரிவித்தார். (ஐ-9)

## போதைவஸ்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்துள்ளது.

இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த பெருந்தொகையான போதைப் பொருள் சென்னையில் கைப்பற்றப்பட்டது. இதனால் இக்கடத்தலைத் தடுக்க இருநாட்டு அதிகாரிகளும் கண்காணிப்பைப் பலப்படுத்தியிருக்கின்றனர். தூத்துக் குடி கரையோரம் வழியாக ஆண்டொன்றுக்கு சாரசரி சுமார் 3 ஆயிரம் கிலோ போதைப்பொருள் கடத்தப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது. இலங்கைக்கு கடத்தப்படவிருந்த, கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் அளவு கடந்த நான்கு ஆண்டுகளில் அதிகரித்து வந்துள்ளது.

1998 ஆம் ஆண்டில் 38 கிலோ கைப்பற்றப்பட்டது. அதற்கு அடுத்த ஆண்டில் அது இரண்டு மடங்கானது. இவ்வாண்டில் இதுவரை 122 கிலோ போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. (ஐ)

## 18 பிரதிநிகள் கொழும்பு வருகை

தேர்தல் ஆணையாளரின் அழைப்பின் பேரில் ஐந்து நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்கள் 18 பேர் கொழும்புக்கு வந்துள்ளனர்.

சுவிஸ், பெல்ஜியம், போலந்து, ஜேர்மனி, பிரிட்டன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த இவர்கள் இன்று தேர்தல் ஆணையாளரைச் சந்தித்துக் கலந்துரையாடுவர் (ஐ)

## மட்டு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிரனேட் தாக்குதல் சம்பவத்தையடுத்து அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய படையினர் 13 இளைஞர்களைக் கைது செய்துள்ளனர். பொலீஸாரும், இராணுவத்தினரும் தாண்டவன்வெளிப் பகுதியில் கூட்டாகத் தேடுதல் நடத்தினர். (ஐ-9)

## கட்டுநாயக்கா மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியுள்ளனர்.

இத்தாக்குதலில் ஈடுபட்ட கரும்புலிகள் மொத்தம் ஆறு 'செல்' தொலைபேசிகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

விமானப் படையின் பிரதான பாதுகாப்பு அறைக்கு சற்றுத் தொலைவில், எல்லைவேலியை விமானப் படைச் சிப்பாய்கள் திறந்துவைத்து இரகசியப் போக்குவரத்துக்குப் பயன் படுத்தி வந்திருக்கின்றார்கள். புற்கள், பற்றைகள் வளர்ந்து இப்பகுதியை மூடியுள்ளது.

படைத்தளத்தில் உள்ள சிப்பாய்கள் உத்தியோகபூர்வ அனுமதி பெறாமல் வெளியே போய்வருவதற்கு இந்தப் பாதையைப் பயன்படுத்தி வந்துள்ளனர். அருகில் ஏற்றுமதி வலயத்தில் பணிபுரியும் இளம் பெண்களுடன் தொடர்புவைத்திருக்கும் சில விமானப் படையினர், இப்பாதை வழியாகக் களவாக வெளியேறி தங்களது சோடிகளைச் சந்தித்துவிட்டு வருவது வழமை.

கட்டுநாயக்கா விமானத் தளத்தை வேவு பார்த்த புலிகள் உறுப்பினர்களான புஷ்பகுமார், குட்டி, கண்ணன் ஆகியோர் இந்தப் பாதை ஊடாக ஏழு தடவைகள் படைத்தளத்துக்குள் சென்று நடமாடி வந்திருக்கின்றார்கள்.

அப்படிப் போய்வரும்போது தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கான ஜாக்கெட் அணிந்து, சயனைட் வில்லைகள், சத்தமில்லாமல் சுடும் - சிவப்பு லேசர் கற்றை மூலம் இலக்கு வைக்கும் வசதிகொண்ட - பிஸ்டல்கள் போன்றவற்றை எடுத்துச் சென்றுள்ளனர்.

ஒரு தடவை, காவல் கடமையில் நின்ற காவலர் ஒருவர் புஷ்பகுமாரைக் கண்டு சினேகமுறையில் பேச முற்பட்டபோது "மச்சான் கெதியிலை வருவோம்" என்ற நல்ல உரையாடல் சிங்களத்தில் பதில் கூறிவிட்டு அவர் படைத்தளத்தில் இருந்து வெளியேறினார்.

தாக்குதலுக்கு இணைப்பாளராகச் செயற்பட்ட புஷ்பகுமார், தாக்குதலின பின்னர் வன்னிக்குச் சென்று புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துள்ளார். அவரது பணியைப் பாராட்டிய பிரபாகரன், விமானப் படைத்தளத்தை விடுதலைப் புலிகள் கைப்பற்றி ஒரு முழுநாள் தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருப்பார்களேயானால், அது புலிகளின் திறமையை சர்வதேச ரீதியில் மேலும் உயர்த்திக் காட்டியிருக்கும் என்று குறிப்பிட்டாராம்.

புஷ்பகுமார் மற்றும் தாக்குதலாளிகளை மினி பஸ்ஸில் ஏற்றிச் சென்ற புலி ஆதரவாளர் விக்டர் டொமினிக், அவரது மனைவி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் மூலம் பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

- இவை உட்பட பல தகவல்கள் அத்தாளின் கட்டுரையில் இடம் பெற்றுள்ளன. (உ)


சயன்ஸ் அக்கடமி
நெல்லியடி
புதிய அலகு ஆரம்பம்
சடமும் கதிர்ப்பும்
ஆசிரியர்:- திரு.குமரன்
செவ்வாய் - 9.00 (94658)



கடைக்கு ஆள் தேவை
திருநெல்வேலிப் பகுதியில்
இயங்கும் பான்ஸி
விற்பனை நிலையம்
ஒன்றுக்கு பெண் விற்பனையாளர்
ஒருவர் உடன் தேவை.
யாழ்.மாநகர எல்லைக்குள்
வசிப்பவர் விரும்பத்தக்கது.
விளம்பர இல:1394
மே/பா.உதயன்,
யாழ்ப்பாணம். (C/19363)



கணனிப் பொதுப்பரீட்சை - 2001
இலங்கையில் முதலாவது தமிழ் கணனிச் சஞ்சிகையான
"கம்ப்யூட்டர் டுடே"
தேசிய ரீதியில் நடத்தவுள்ள பெறுமதிமிக்க சான்றிதழுக்கான கணனிப் பரீட்சை STPயின் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்திலும்.....
விண்ணப்ப முடிவு திகதி: 30.11.2001
விவரங்கள் மற்றும் பாடத்திட்டத்துக்கு:
ம.அருள்குமரன்
(மாவட்டப்பரீட்சை இணைப்பாளர்)
யாழ்ப்பாணம்.
STPComputer World(Pvt)Ltd,
54A,Kanthermadam, Jaffna.
பரீட்சைக்கான வகுப்புகளும் கருத்தரங்குகளும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.
(C/19360)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.11.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.